Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 08 (11.04.2003) வெள்ளிக்கிழமை இதழ் :190

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும்

பலிக்களம்

(திருப்பாடுகளின் காட்சி)
இன்று இரண்டாவது நாளாக
10,11,12,13 ஏப்ரல் 2003
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)

மன்ற அரங்கில் மாலை 7.00 மணிக்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். -திருமறைக்கலாமன்றம்
(சி-787)

## சிறுவர்களுக்கான ஆய்வுப்பட்டறை

போரால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான ஆய்வுப்பட்டறை ஒன்று, கிளிநொச்சியிலுள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுப் பகல் 12.00 மணியளவில் ஆரம்பமானது.

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இப்பட்டறையில், புலிகளின் தரப்புப் பிரதிநிதிகள், பிரதமரின் சமாதானச் செயலகத்தின் பிரதிநிதிகள், வடக்கு - கிழக்கு அரச அதிபர்கள் மற்றும் பிரதிநிதிகள், வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள், யுனிசெப், யு.என்.எச்.சி.ஆர்., யு.என்.டி.பி., உலக சுகாதார ஸ்தாபனம், உலக உணவுத்திட்டம், ஜி.ரி.இசற் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், அரசாங்கத்தின் சமாதானச்

(10 ஆம் பக்கம் பார்க்க)



## சுபானு புது வருஷப் பிறப்பு

வாக்கிய பஞ்சாங்கப்படி மங்களகரமான சுபானு வருஷம் 14.04.2003 திங்கட்கிழமை முற்பகல் 9.52 இற்கு (பழைய நேரம்) பிறக்கின்றது.

அதிகாலை 5.53 தொடக்கம் பிற்பகல் 1.52 வரை விஷு புண்ணிய காலமாகும்.


பரணி, மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம், பூராடம், உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோருக்கு சங்கிரம தோஷம் உண்டு.

கைவிசேஷம்:-
14-04-2003 திங்கட்கிழமை பகல்
2.22 - 4.10 வரை
16-04-2003 புதன்கிழமை பகல் 2.39 - 4.12 வரை
(பழைய நேரப்படி)

# ஜப்பான் மாநாட்டுக்கான திட்டங்கள்

# சர்வதேச அமைப்புகள் - புலிகள் ஆய்வு

## விண்ணாணம் விநாசியர்



ஊட்டி வளத்த தேப்பனையே உதறித்தள்ளிற உலகம் - சந்நிதியானே தலை சுத்துதப்பா..!



சந்திப்பில் கலந்துகொண்ட சு.ப.தமிழ்ச்செல்வனும், ஜோய் மகேஸ்வரனும்

## நேற்று கிளிநொச்சியில் சந்திப்பு

(கிளிநொச்சி)

**ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் இலங்கைக்கான பிரதிநிதிகள், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.**

நேற்றுமுன்தினம் 11.45 முதல் 1.15 வரை கிளிநொச்சி அரசியற்துறை நடுவப்பணிமனையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி ஜோன் கூனி, உலகவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட், யு.என்.டி.பியின் இலங்கைக்கான பிரதிநிதி மிக்கேல் ஃபேமியோ ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளருடன், பொருளியல் ஆலோசகர் ஜோய் மகேஸ்வரனும் இதில் கலந்துகொண்டார். ஜப்பானில் நடைபெறப்போகும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ள திட்டங்கள் பற்றி இதில் கலந்துரையாடப்பட்டது.

## இன்று வர்த்தக பாட செயலமர்வு

"நமது ஈழநாடு" நடத்தும் க.பொ.த. உயர்தரப்பரீட்சையின் வர்த்தக பாடங்களுக்கான செயலமர்வு, இன்று காலை 8.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறுகிறது.

# சாதாரணதர பரீட்சை பெறுபேறு பாடசாலைகளுக்கு கிடைத்தது

## வடமராட்சியில் ஹாட்லி முன்னணி

அண்மையில் வெளியான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு வந்துசேர்ந்தன.

வடமராட்சி பாடசாலைகளின் சில முடிவுகள் வருமாறு-

*ஹாட்லிக் கல்லூரி*

ம.மதனன் 9A, C, லோ.நந்தரூபன் 9A, S, ஏழு மாணவர்கள் 8A யையும் பத்து மாணவர்கள் 7A யையும் பெற்றுள்ளனர்.

*வட இந்து மகளிர் கல்லூரி*

கு.சங்கீதா 8A 2B, இ.உமா 8A 2C, இரு மாணவிகள் 7A யையும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி - நம்பியார் புதுடெல்கியில் சந்திப்பு

நான்கு நாள் விஜயமாக இந்தியாவுக்குச் சென்ற ஜனாதிபதி சந்திரிகா, முன்னாள் இந்தியப் பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால் மற்றும் ஜெனரல் சதீஷ் நம்பியார் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பாகவே; இவர்கள் பேச்சுக்களை நடாத்தினார்கள். இச்சந்திப்பில் முன்னாள் தூதுவர் சங்கர்மேனன். இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிருபம் சென் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் லக்ஷ்மன் கதிர்காமர், பாலபெத்த பெண்டி, ஃபேரியல் அஷ்ரப் ஆகியோரும் கல்ந்துகொண்டனர்.

# தொண்டர் ஆசிரியர் நியமனம் கொள்கையளவில் இணக்கம்

## கூட்டமைப்பு - பிரதமர் சந்திப்பில்

வடக்கு - கிழக்கில் ஆயிரம் தமிழ்மொழி மூல தொண்டர் ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பாக - நேற்று தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள், பிரதமருடன் நடத்திய சந்திப்பில், நியமனத்திற்கான கொள்கையளவு இணக்கம் காணப்பட்டதாக, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது - கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, அமைச்சரவைச் செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் மேலதிகாரிகள், திறைசேரி அதிகாரிகள்

(10 ஆம் பக்கம் பார்க்க)



இந்தியப் பிரதமர் வாஜ்பாயை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று புதுடெல்கியில் சந்தித்தார்.

# வயதான தந்தையாரை அநாதரவாக விட்ட மகன்

வயதான தனது தந்தையை அநாதரவாக செல்வச்சந்நிதி ஆலயப் பகுதியில் அவரது மகன் கொண்டுவந்து விட்டுச்சென்ற மனிதாபிமானமற்ற சம்பவம் அண்மையில் நடந்துள்ளது.

நடமாடமுடியாத, வரணியைச் சேர்ந்த இந்த வயோதிபரை, அவரது மகனும் மருமகளுமாகச் சேர்ந்து ஓட்டோ ஒன்றில் இப்பகுதியில் கொண்டு வந்து இறக்கிவிட்டுத் தலைமறைவாகி விட்டனர்.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் கிராமசேவகருடன் தொடர்பு கொண்டபோதும், அந்த வயோதிபரின் உறவினர்கள் இதுபற்றி அக்கறை காட்டவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (76)



திருமலையில் நடைபெறும் மானுடத்தின் தமிழ்க் கூடல் -2 விழாவில் ஒரு கலைநிகழ்வு.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-730)

# அதிர்ஷ்ட வாரம்

**11.04.2003 - 17.04.2003**

## மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

தொழில் சிறப்பு உண்டு. எடுத்த காரியம் வெற்றிபெறும். குடும்பத்தில் சுபகாரியப் பேறுண்டு. நண்பர்கள், உறவினர்கள் உதவிசெய்வர். பொருளாதாரக் கஷ்டமுண்டு. வியாபாரத்துறையினருக்கு நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும். பெண்களுக்கு குடும்ப சுகமுண்டு. மகிழ்ச்சி நிலவும். மாணவர்களுக்குக் கல்வியால் சிறப்புண்டு.

## இடபம்

கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதம்

தேகசுகம் பாதிக்கப்படும். பொருட்செலவு அதிகமாகவிருக்கும். தொழில் சிறப்புண்டு. உறவினர், நண்பர்களுடன் மனக் கசப்பு உண்டாகும். பிரயாணக் கஷ்டமுண்டு. வியாபாரத்துறையினருக்கு லாபம் குறையும். அலைச்சல் அதிகமாகும். பெண்களுக்கு குடும்பநிலை சீராக இராது. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் குறையும்.

## மிதுனம்

மிருகசீரிடம் 2,3 ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதம்

எடுத்தகாரியம் தடை, தாமதமின்றி ஒப்பேறும். பிரயாணத்தால் நன்மையுண்டு. வாகன லாபமுண்டு. திருமண முயற்சிகள் கைகூடும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பணவரவுக்கு இடமுண்டு. வியாபாரத் துறையினருக்கு நல்ல லாபம் கிடைக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் சந்தோஷமும் நிம்மதியும் காணப்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமுண்டு.

## கர்க்கடகம்

புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

தேகசுகம் பாதிக்கப்படும். மனக் குழப்பத்தையும் வீண் பிரச்சினைகளையும் கொடுக்கும். தொழிற்துறையில் சமபலனுண்டு. பொருளாதார நிலை சீராக இருக்கும். சமூகத்தில் நன்மதிப்பு இருக்கும். வியாபாரத் துறையினருக்கு பணப்புழக்கம் அதிகரிக்கும். பெண்களுக்கு களஸ்திர சுகமுண்டு. நாரி, நெஞ்சு வலி இருக்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்புண்டு.

## சிங்கம்

மகம், பூசம், உத்தரம் 1 ஆம் பாதம்

தொழில் முன்னேற்றமுண்டு. பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். பெரியோர் சந்திப்பு உண்டு, ஆன்மீகத் துறையில் ஈடுபாட்டைக் கொடுக்கும். இனசன கொண்டாட்டம், சுபகாரிய பேறுண்டு. வியாபாரத் துறையினருக்கு பணப்பற்றாக் குறை காணப்படும். பெண்களுக்கு விவாகாதி சுபகாரியம் கைகூடும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும்.

## கன்னி

உத்தரம் 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதம்

எடுத்த காரியம் வெற்றிபெறும். தொழிற்துறை சிறப்புற முன்னேறும். பொருளாதாரநிலை சீராக இருக்கும். உறவினரால் நன்மையுண்டு. வாகனம் லாபம் தரும். விவாக முயற்சிகள் கைகூடும். வியாபாரத் துறையினருக்கு நல்ல முன்னேற்றமுண்டு. பெண்களுக்கு பொன், பொருள், ஆபரண சேர்க்கையுண்டு. மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றமுண்டு.

## துலாம்

சித்திரை 3,4 ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதம்

தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் சமபலனுண்டு. பொருளாதார நிலை சீராக இருக்கும். வெளியூரிலிருந்து உதவிகள் கிடைக்கும். உறவினர் நண்பர்கள் உதவி செய்வர். வியாபாரத் துறையினருக்கு நல்ல முன்னேற்றமுண்டு. பெண்களுக்கு குடும்பத்தில் ஒற்றுமையும் சந்தோஷமும் காணப்படும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் குறையும்.

## விருச்சிகம்

விசாகம், 4 ஆம் பாதம், அனுசம், கேட்டை

தொழில் சிறப்புண்டு. பெரியோர் மதிப்பு உண்டு. எடுத்த காரியம் வெற்றிபெறும். சமூகத்தில் நன்மதிப்பும் கௌரவமும் இருக்கும். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். வியாபாரத் துறையினருக்கு நல்ல லாபம் கிடைக்கும். பணவரவுண்டு பெண்களுக்கு விவாக முயற்சிகள் கைகூடும். மாணவர்கள் கல்வியில் அதிக ஈடுபாடு காட்டுவர்.

## தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்

எடுத்த முயற்சிகள் தாமதப்படும். பிரயாணத்தால் செலவையும், கஷ்ரத்தையும் கொடுக்கும். இனசன விரோதம், வாக்கு கலகம் உண்டு. தொழிற்துறையில் பாதிப்பு உண்டு. பொருளாதாரக் கஷ்ரமுண்டு. வியாபாரத் துறையினருக்கு நஷ்டம் ஏற்படும். பெண்களுக்கு பொருள் இழப்பையும், பணச்செலவையும் கொடுக்கும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றமுண்டு.

## மகரம்

உத்தராடம் 2,3,4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதம்

தொழில் நல்ல முறையில் இருக்கும். பொருளாதார முன்னேற்றமுண்டு. குடும்பத்தில் சந்தோஷம் காணப்படும். எடுத்த முயற்சி கைகூடும். வீடு, பூமி லாபம் தரும். உறவினர் உதவிசெய்வர். வியாபாரத் துறையினருக்கு நல்ல லாபம் கிடைக்கும். பெண்களுக்குக் குடும்ப சுகமுண்டு. மாணவர்கள் கல்வியில் சமபலனுண்டு.

## கும்பம்

அவிட்டம், 3,4 ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதம்

தொழிற்துறை பாதிக்கப்படும். பொருளாதாரக் கஷ்ரமுண்டு, இனசன விரோதம் உண்டு. தேகசுகம் பாதிக்கப்படும். மனதில் அமைதி இராது. சமூக அந்தஸ்து குறையலாம். வியாபாரத்துறையில் போட்டி அதிகரிக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் பிரச்சினைகள் தலைதூக்கும். மாணவர்கள் உற்சாகமின்றிக் காணப்படுவர்.

## மீனம்

பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி

தொழில் சிறப்புண்டு. நினைத்த காரிய சித்தியுண்டு. பொருளாதார நிலை சீராக இருக்கும். உறவினர், நண்பர்கள் உதவி செய்வர். வாகனத்தால் செலவுக்கு இடமுண்டு. வியாபாரத் துறையினருக்கு நல்ல முன்னேற்றமுண்டு. பெண்கள் அதிக நன்மை அடைவர். பணவரவுக்கு இடமுண்டு. மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் செலுத்துவர்.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

# யார் ஆட்சி அமைத்தாலும் அமைதி முயற்சி தொடரும்

## வாஜ்பாயிடம் சந்திரிகா உறுதியளித்தார்


(கொழும்பு)

இலங்கையில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், அமைதி முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று, இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயிடம் - ஜனாதிபதி சந்திரிகா உறுதிமொழி வழங்கியுள்ளார்.

புதுடெல்கியில் நேற்று நடைபெற்ற இந்தியப் பிரதமருடனான சந்திப்பின்போதே, ஜனாதிபதியால் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

ஜே.வி.பியுடன், தமது கட்சி கூட்டணி அமைக்கும் முயற்சிகள் முன்னேற்றம் அடைந்து வருவதாகவும், இரு கட்சிகளும் இணைந்து செயற்படவிருப்பதாகவும் மேலும் தெரிவித்த ஜனாதிபதி -

சில விடயங்கள் தொடர்பாக இணக்கப்பாடுகள் உருவாகவில்லை என்றும், கூட்டணி அமைப்பதற்கான இணக்கப்பாட்டுக்கு இருதரப்புகளும் வந்து கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். (01)




யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு, லண்டன் முத்துமாரியம்மன் ஆலயத்தின் உதவியுடன் பிரபல சமயச் சொற்பொழிவாளர் ஆறு திருமுருகனால் வழங்கப்பட்ட நவீன லேசர் கருவி.

# உயர் நீதிமன்ற நீதியரசருக்கு எதிராக வழக்குத் தாக்கல்!

உயர் நீதிமன்ற நீதியரசர் சரத் என்.சில்வா மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழு ஆகியவற்றுக்கு எதிராக - சேவையில் இருந்து நீக்கப்பட்ட இரண்டு நீதிவான்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

மாளிகாகந்த நீதிவானாக இருந்த ரி.சிறிவர்த்தன, நீர்கொழும்பு நீதிவானாக இருந்த பிரியதர்சன பண்டாரநாயக்க ஆகியோரே மேற்படி வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் - மேலும் எட்டுப்பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். எதுவித விசாரணைகளுமின்றித் தம்மைப் பதவியில் இருந்து நீக்கியது தவறு என்று சுட்டிக்காட்டியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

## வான் முழக்கம் சிறப்பிதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வான் முழக்கம் சஞ்சிகையின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும், முதலாம் ஆண்டு சிறப்பிதழ் வெளியீடும் இன்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் - பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஐ.எம்.எவ். நிதியுதவி

இலங்கைக்குக் கடனாக 560 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்குவதற்கான அனுமதிக்காக, சர்வதேச நாணய நிதியம் அடுத்த வாரம் கூடவுள்ளதாக இந்நிதியத்தின் வதிவிடப்பிரதிநிதி காட்டர் தெரிவித்தார்.


நமது ஈழநாடு நடாத்தும்

க.பொ.த (உயர்தரம்) 2003
வர்த்தகப் பிரிவுக்கான
மாபெரும் முன்னோடிக் கருத்தரங்கு

அனுசரணை ~

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்
Best Bank in Srilanka

Institute of Informatics Studies

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

பூபாலசிங்கம் புத்தகசாலை

Elephant house
Necto

ஆசிரியர் குழாம்
வணிகக் கல்வி:- திரு. B.பசில் கணக்கீடு:- திரு. D.Sam
பொருளியல்:- திரு.இராஜேஸ்வரன்
காலம்:- 11.04.2003 இன்று (வெள்ளிக்கிழமை)
நேரம்:- காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை
இடம்:- யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி.

சிறு விளம்பரம்

பல்கட்டுதல்

பல்கட்டுதல், பல் கிளிப்போடுதல், நல்லமுறையில், நியாய விலையில் மேற்கொள்ளலாம். கண் பரிசோதிக்கப்பட்டு நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறலாம். (மொறாயஸ்) ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம். இல 05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம். (சி-805)

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
Jurrasic Park - 3
(பாடசாலை மாணவர் பார்த்து மகிழக்கூடியது)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
BEST OF THE BEST
14.04.2003 முதல் ரமணா
(சி-731)

ராஜா யாழ்ப்பாணம்.
ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா நடித்த
ரோஜாக்கூட்டம்
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30 இற்கும்
புதுவருட வெளியீடு
சரத்குமார், சிம்ரன், றோஜா
அரசு
(சி-732)

மலிவு விற்பனை
20% முதல் 50% வரை
புதுக்கணக்குப் போடவிருப்பதால்
பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது.
ஒருமுறை விஜயம் செய்யுங்கள். (சி-753)
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# அதிகாரப் பரவலாக்கலை ஏற்காவிட்டால் பெரும் அழிவுகளுக்கே அது வழிவிடும்!

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அதிகாரப் பரவலாக்கலை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அது பெரும் அழிவுகளுக்கு இட்டுச் செல்லும் என்று நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கல்வியமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -


இந்தியா அதிகாரங்களைப் பரவலாக்காமல் - புதுடெல்கியிலேயே தனது அதிகாரங்களைக் குவித்து வைத்திருந்தால், இன்று ஆறு நாடுகளாகப் பிளவுபட்டுப் போயிருக்கும்.

இன்றும் இந்தியா ஒரேநாடாக இருப்பதற்கு ஜவஹர்லால் நேரு, மகாத்மா காந்தி போன்ற தலைவர்களின் தூரநோக்கு- அதிகாரப்பரவலாக்கத்துக்கு வழிவிட்டிருந்தது. இதனால், இன்று இந்தியா ஒருமைப்பாட்டுடன் இருக்கின்றது.

இதுபோன்றே, கனடாவும் பிளவுபடாமல் ஒருமைப்பாட்டுடன் இருப்பதற்கு அதிகாரப்பரவலாக்கமே காரணம். பிரஞ்சுமொழி பேசும் கியுபெக் மாநிலத்துக்கு அதிகாரங்களைப் பரவலாக்கியதே, அது இன்றும் கனடாவில் இணைந்திருக்கக் காரணமாகும்.

சூழ்நிலைகளின் அடிப்படையில் நாம் அதிகாரங்களைப் பரவலாக்கிக் கொள்ள வேண்டும். யுத்தத்தால் ஏற்பட்டு வந்த உயிரழிவுகள் இன்று நிறுத்தப்பட்டுவிட்டன.

யுத்தத்துக்காகச் செலவிடப்பட்ட பணத்தின் ஒரு பகுதியை நாம் இப்போது அபிவிருத்திக்காகச் செலவிட முடிகின்றது. யுத்தத்துக்குச் செலவிடப்பட்ட நிதியில் 70 சதவீதம் மீதப்படுத்தப்பட்டு, அப்பணம் அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வாக வழங்கப்பட்டுள்ளது என்றும்



அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## சீருடைகளைப் பெற அறிவுறுத்தல்

கரவெட்டிப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட முப்பத்தைந்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் பாடசாலை மாணவர்களின் சீருடைகளுக்கான முத்திரைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை சீருடை முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள்- உடனடியாகக் கிராம அலுவலர்களுடன் தொடர்புகொண்டு முத்திரைகளைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துமாறு கரவெட்டிப் பிரதேசசெயலர் க.கனகரத்தினம் கேட்டுள்ளார். (116)

## விவசாயம் செய்ய குப்பிளானில் தடை

குப்பிளானின் சில பகுதிகளில் விவசாயம் செய்வதற்கு இராணுவத்தினர் தடை விதித்திருப்பதாகத் தெரியவருகிறது. இப்பகுதியில் விவசாயம் செய்யும் விவசாயிகளைப் பயிர் செய்யக்கூடாது என இராணுவத்தினர் பணித்துள்ளனர். இராணுத்தினரின் இதுபோன்ற திடீர் நடவடிக்கையால் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ரா)

# இந்திய மீன்பிடிப்படகில் வெடிபொருட்கள் மீட்பு

## 4 மீனவர்களும் விளக்கமறியலில்

தலைமன்னார் கடற்பரப்பில் இந்திய மீன்பிடிப்படகு ஒன்றிலிருந்து கடற்படையினர் ஒரு தொகுதி வெடிபொருட்களை மீட்டிருப்பதாகத் தெரிவித்தனர்.

இந்திய மீன்பிடிப்படகைச் சோதனையிட்ட கடற்படையினர், அதில் வெடிபொருட்கள் இருந்ததைக் கண்டுபிடித்ததும், அதிலிருந்த நான்கு மீனவர்களையும் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நீதிமன்றில் நிறுத்தப்பட்ட நான்கு மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் உத்தரவிட்டார்.

# உறுதியான சமாதான முயற்சிகளுக்கு நோர்வேயின் மத்தியஸ்தமே காரணம்

## வெஸ்பேர்க் பிரியாவிடை நிகழ்வில் பிரட்மன்



வெஸ்பேர்க்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான அமைதி முயற்சிகள் உறுதியாக முன்னெடுக்கப்படுவதற்கு - வலுவான மத்தியஸ்தராக நோர்வே செயற்படுவதே காரணம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகரும் செயலருமான பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

நோர்வே தூதுவராகப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற ஜோன் வெஸ்பேர்க்கிற்கு - கொழும்பு கோல்பேஸ் ஹோட்டேலில் அளிக்கப்பட்ட பிரியாவிடை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரட்மன் வீரக்கோன் அங்கு மேலும் பேசுகையில், கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் தோல்வி கண்டமைக்கு வலுவான மத்தியஸ்தர் ஒருவர் இல்லாமையே காரணமாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திறமையாக அரசாங்கத்தை நடத்திச்செல்கிறார். இதனால், சர்வதேச ஆதரவினை அவர் பெற்றுள்ளதுடன், பெருமளவு வெளிநாட்டு உதவிகளையும் பெறமுடிந்துள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் செயலாளர் பாலபெத்தபெண்டி -

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1994 இல் புலிகளுடன் ஒரு மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. ஆனால் வலுவான, சுதந்திரமான அனுசரணையாளர்கள் எமக்குக் கிடைக்காததால், அந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிந்துபோனது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய வெஸ்பேர்க் -

தூதுவர் பதவியிலிருந்து விலகிச்சென்றாலும், இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்குத் தன்னாலான உதவிகளைச் செய்வதாகவும், கடந்த ஒரு வருடமாக நீடிக்கும் யுத்த நிறுத்தம் மற்றும் சமாதானப் பேச்சுக்களுக்குத் தானும் ஒரு காரணமாக இருந்தது சந்தோஷத்தை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

# பேச்சுக்களை நடத்துவதற்கு மாலைதீவும் அழைப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசாங்கம் நடத்திவரும் சமாதானப் பேச்சுக்களை தமது நாட்டில் நடத்துவதற்கு மாலைதீவு அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான அறிவித்தல்- இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதனிடையே மாலைதீவு ஜனாதிபதி ம.ஃமூன் அப்துல் கயூம் அடுத்த மாதம் ஆறாம் திகதி கொழும்புக்கு வரவுள்ளார். அவர் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பல்வேறு தரப்புகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார் என்றும் மாலைதீவு அரசு அறிவித்துள்ளது.

# ஜனாதிபதியின் கண்டனம் எமக்குக் கிடைக்கவில்லை

## கிளிநொச்சியில் ரெலவ்சன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சீன ட்ரோலர் தாக்கப்பட்டது பற்றிய போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அறிக்கை பற்றி ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் தெரிவித்தார்.

சென்ற மாதம் 20ஆம் திகதி முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீன மீன்பிடி ட்ரோலர் தாக்கப்பட்டது. இந்த விசாரணையில் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பக்கச்சார்பாக நடந்து கொண்டதாக ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளதாக, ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. அவ்வாறான ஊடகங்களில்வரும் செய்திகளை வைத்துக்கொண்டு தம்மால் எந்தக் கருத்தினையும் கூறமுடியாது எனத் தெரிவித்த ரெலவ்சன், தமக்கு ஜனாதிபதியின் கடிதம் கிடைத்தால், தம்மால் ஜனாதிபதியுடன் இந்த விடயம் பற்றி தொடர்புகொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# குறைந்த வருமானம்பெறும் ஊழியர்கள் வீடுகளை கொள்வனவு செய்ய வாய்ப்பு!

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கென வீடமைப்புத் திட்டம் ஒன்றை அமைப்பதற்காக அரசாங்கம் - மலேசியாவைச் சேர்ந்த இரண்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

அரசாங்கத்தின் சார்பில் பொதுநிர்வாக மறுசீரமைப்புத்துறை அமைச்சு இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி- நாடு முழுவதும் மொத்தம் இருபத்தையாயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன. முதற்கட்டமாகக் காலியில் 1500 வீடுகளை அமைக்கும் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தலா 750 வீடுகளைக் கொண்ட ஐந்து மாடிக் கட்டடத்தொகுதிகள் இரண்டு கட்டப்படவுள்ளன. இத்திட்டம் ஏனைய மாவட்டங்களுக்கும் விரைவில் விஸ்தரிக்கப்படும் எனப் பொதுநிர்வாக மறுசீரமைப்புத்துறை அமைச்சு தெரிவித்தது.

பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் அரச ஊழியர்கள்- பத்து இலட்சம் பேரில், மூன்று இலட்சம் ஊழியர்கள் வீடுகள் இன்றிக் கஷ்டப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

இதையடுத்தே வீடமைப்புத் திட்டங்களை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. காலியில் அமைக்கப்படவுள்ள 1500 வீடுகளில், 50 வீதமானவை ஐந்து இலட்சம் ரூபாவுக்கும், 30 வீதமானவை 7 இலட்சம் ரூபாவுக்கும் எஞ்சிய 20 வீதமானவை பத்து இலட்சம் ரூபாவுக்கும் என்ற வகையில் அரச ஊழியர்களுக்கு அவை விற்கப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

## புதிய கட்டடத்தில் சுகாதார பிரதிப்பணிப்பாளர் பணிமனை

யாழ். கச்சேரி நல்லூர் வீதியில், தனியார் கட்டடமொன்றில் இயங்கி வந்த சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரின் பணிமனை - அரசினர் போதனா வைத்திய சாலைக்குச் சமீபமாகவுள்ள மாடிக் கட்டடத்தில் செயற்பட்டு வருகின்றது.

மேற்படி கட்டடம் சுமார் 80 லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, யாழ். மலேரியாத் தடுப்பு இயக்கப் பிரிவும் இக்கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்க ஆரம்பித்துள்ளது. (100)

## திருகோணமலையில் நடைபெற்றுவரும் மானுடத்தின் தமிழ்க்கூடல் 2 ஆம் நாள் நிகழ்விலிருந்து...








# தும்பளை மீனவர்களுக்கான வீட்டுத்திட்டம் இடைநிறுத்தம்!

## நிதியின்மையே காரணமாம்

(வடமராட்சி)

பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் அமைக்கப்பட்ட மீனவர்களுக்கான ஐம்பது வீட்டுத்திட்டம் வருடக்கணக்காகியும் இன்னமும் பூர்த்தியடையவில்லை. நிதி வழங்குவது இழுத்தடிக்கப் பட்டுவருவதே இதற்குக் காரணமெனக் கூறப்படுகின்றது.

தும்பளை கிழக்குப் பகுதியில் மீனவர்களுக்கெனக் குடியிருப்பு அமைப்பதற்குக் கடற்தொழில் நீரியல்வள அமைச்சும், புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையும் இணைந்து மீனவர்களுக்கான ஐம்பது வீட்டுத்திட்டம் இரண்டாயிரமாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இதற்கான நிதி பிரதேச செயலகத்தினால் கட்டங்கட்டமாக வழங்கப்பட்டு வந்தது. விநியோக இழுபறி நிலையினால் இத்திட்டத்தில் முப்பது வீடுகள் மட்டுமே பூரணமாக முடிந்த நிலையிலும், மிகுதி இருபது வீடுகள் இன்னமும் பூர்த்தியாகாத நிலையிலும் உள்ளன.

அடுத்த கட்ட வேலைகளை ஆரம்பிப்பதற்கு வழங்க வேண்டிய நிதி இன்னமும் வழங்கப்படாமல் இருப்பதனாலே வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாதிருப்பதாக மீனவர் குடியிருப்பாளர் ஒருவர் தெரிவித்தார். (23)

# ஜப்பானிய தூதுவர் அகாஷி அமெரிக்காவுக்குப் பயணம்!

ஜப்பானின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் யசுஷி அகாஷி நேற்று முன்தினம் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்.

ரோக்கியோவில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்னோடியாக, எதிர்வரும் 14 ஆம் திகதி வொஷிங்ரனில் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

40 நாடுகளின் பிரதிநிதிகளும், சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளும் இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராயவே அகாஷி அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார்.

இவர் அமெரிக்காவில் பல்வேறு தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்துவதாகவும் தெரியவருகின்றது.

# சின்னஞ்சிறு செய்திகள்

### தென்கிழக்காசியாவுக்கு செல்லவேண்டாம்

(கொழும்பு)

தென்கிழக்காசிய நாடுகளில் வேகமாகப் பரவிவரும் 'சார்ஸ்' உயிர்க்கொல்லி நோய் இலங்கையில் பரவாமல் தடுப்பதற்காக - சீனா, வியட்நாம், ஹொங்கொங் ஆகிய நாடுகளுக்கு இலங்கையர்கள் பயணம் செய்ய வேண்டாம் என்று அரசாங்கம் கேட்டுள்ளது.

### புற்றுநோய் வைத்திய கிராமம் பற்றிய கூட்டம்

புற்றுநோய் வைத்தியக் கிராமம் அமைப்பது பற்றிய கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு கோவில் வீதியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா.உயர் ஸ்தானிகராலயப் பணிமனையில் யாழ்மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் நடாத்தப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பல்வேறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (சு)

### ஈ.பி.டி.பியின் பிரசுரங்கள் மீண்டும் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பியின் துண்டுப்பிரசுரங்கள் சங்கானையில் இரண்டாவது நாளாகவும் நேற்று முன்தினம் பொதுமக்களால் எரிக்கப்பட்டுள்ளது.

சங்கானை மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் ஈ.பி.டி.பியினர் தமது துண்டுப் பிரசுரங்களை நேற்று முன்தினம் விநியோகித்தனர். அப்போது அப்பிரசுரங்களைப் பறித்த மக்கள் அவற்றைத் தீமூட்டி எரித்துள்ளனர்.

### சனசமூக நிலைய சமாசத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சனசமூக நிலையங்களுக்கான 2003 ஆம் ஆண்டு சமாச தெரிவு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப.3.00 மணிக்கு கொக்குவில் உப- அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற இருப்பதாகவும், சனசமூக நிலையச் சமாசப் பிரதிநிதியினைக் கலந்து கொள்ளுமாறும் நலலூர் பிரதேசசபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# விமானப்படைக்கு உதவ அமெரிக்க தளபதி இணக்கம்

இலங்கை விமானப் படைக்கென தொழில்நுட்ப மற்றும் பராமரிப்பு, பயிற்சி உதவிகளை வழங்க அமெரிக்க விமானப்படை இணக்கம் தெரிவித்துள்ளது.

நான்கு நாள் விஜயமாகக் கொழும்பு வந்திருந்த அமெரிக்க விமானப்படையின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான கட்டளைத்தளபதி ஜெனரல் வில்லியம் கே.பெசக் இத்தகவலை வெளியிட்டுள்ளார். இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நாடுதிரும்பிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தான், கட்டுநாயக்க மற்றும் திருகோணமலை - சீனன் குடா விமான நிலையங்களை நேரில் சென்று பார்வையிட்டதாகவும், இந்த விமான நிலையங்களுக்கு தொழில்நுட்ப வசதிகளையும், பராமரிப்பு மற்றும் பயிற்சி உதவிகளையும் வழங்குவதற்கு அமெரிக்க விமானப்படை சார்பில் இணக்கம் தெரிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு வந்திருந்த அமெரிக்க வான்படையின் ஆசிய, பசுபிக் பிராந்தியக் கட்டளைத் தளபதி ஜெனரல் வில்லியம் கே.பெசக்கிடம் விமானப்படைத்தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா மேலதிகப் பயிற்சி மற்றும் விமானப்பராமரிப்பு உதவிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# போலி நிறுத்தல், அளவைக் கருவிகள்; கண்டுபிடிப்பதற்குத் திடீர் சோதனை

போலியான நிறுத்தல் மற்றும் அளவைக் கருவிகளைப் பயன்படுத்தும் வர்த்தக நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி வர்த்தக, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணாநாயக்க உத்தரவிட்டிருக்கிறார்.

இதையடுத்து போலியான நிறுத்தல் அளவைக் கருவிகளைப் பயன்படுத்தும் வர்த்தக நிறுவனங்களைக் கண்டுபிடிக்க விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழு கடந்தவாரம் நாட்டில் பலபாகங்களிலும் நடத்திய சோதனைகளின்போது - 586 வர்த்தக நிலையங்களில் போலியான கருவிகள் பயன்படுத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### உதைபந்தாட்ட இறுதிப் போட்டி முடிவுகள்

அராலி பாரதி விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட வலி. மேற்கு, வலி.கிழக்குப் பிரதேச பிரிவுகளிலுள்ள, விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை கடந்த மாதம் 20 ஆம் திகதி முதல் நடாத்தி வந்தது. இதன் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை அராலி இந்துக் கல்லூரி மைதானத்தில் கழகத் தலைவர் எஸ். செல்வரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

இதில் முதலாம் இடத்தை இளவாலை யங் கென்றீஸ் விளையாட்டுக்கழக A அணியும், இரண்டாம் இடத்தை ஆனைக்கோட்டை ஐக்கிய விளையாட்டு கழகமும், மூன்றாம் இடத்தை இளவாலை யங் கென்றீஸ் விளையாட்டுக்கழக B அணியும் பெற்றுள்ளன. (118)

# களுத்துறைக்கு சிங்களக் கைதிகள் தமிழ்க் கைதிகள் மத்தியில் அச்சம்

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து 900 சிங்களக் கைதிகள் நேற்று களுத்துறைச் சிறைக்கு மாற்றப்பட்டதால், தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக, களுத்துறைத் தமிழ் கைதிகள் ஊடகங்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர். களுத்துறைச் சிறைச்சாலையில் நூறு வரையான தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# 1500 ரூபாவுக்கு மேல் நிலுவையாயின் மின்சார இணைப்பு துண்டிக்கப்படும்!

## அடுத்தமாதம் முதல் நடவடிக்கை

(வடமராட்சி)

குடாநாட்டு மின்பாவனையாளர்கள் ஆயிரத்து ஐநூறு ரூபாவுக்கு மேல் மின் கட்டணங்கள் செலுத்தாது நிலுவையாக உள்ள மின்பாவனையாளர்களது மின் இணைப்புத் துண்டிக்கப்படும். இந்த நடைமுறை அடுத்தவாரம் முதல் அமுலுக்கு வரவிருப்பதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் மின்சாரம் பெற்றுவரும் மின்பாவனையாளர்கள் மின்சாரசபைக்குச் செலுத்த வேண்டிய நிலுவைக்கட்டணம் அதிகமாக இருப்பதனால், பெருமளவு நிதி முடங்கியுள்ளது. இது மின்சாரசபைக்கு நிதி நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

மின்பாவனையாளர்கள் செலுத்த வேண்டிய நிதியினை உடன் செலுத்துவதன் மூலம் மின் இணைப்புத் துண்டிக்கப்பவடுவதைத் தடுத்துக் கொள்ளமுடியும். மின்கட்டணம் ஆயிரத்து ஐநூறு ரூபாவுக்கு மேல் செலுத்தப்படாமல் இருக்குமாயின் அவர்களுடைய மின் இணைப்புத் துண்டிக்கப்படுவதுடன் மேலதிக கட்டணங்களும் அறவிடப்படும்.

மின் கட்டணம் செலுத்த வேண்டிய பட்டியல் அடுத்த மாதம் வந்ததும் உடனடியாக இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்படுமென அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (23)

## வாழ்க வளமுடன்






### முதலாவது அகவையில்



பெயர் : ப.நர்மதன்
முகவரி: மீசாலை கிழக்கு, மீசாலை.

### மூன்றாவது அகவையில்



பெயர் : மு.கமலினி
முகவரி: கணேஸ்வரம், அளவெட்டி.

### மூன்றாவது அகவையில்



பெயர் : த.கஜந்தன்
முகவரி: ஓடக்கரை, பருத்தித்துறை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:--------------------

முகவரி :--------------------

பிறந்த ஆண்டு:--------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்

அத்தியாயம் 1

# ஒரு பூவின் பயணம்

த.சாரங்கா

"ரோஜா மலர்களுள்
ராஜா அடிமையேது?
நாதவெளியில்
திக்குகளேது?
தீக்குள் திசையேது?"

என்கின்ற வண்ணநிலவனின் கவிதையில் முதற்கால் பதித்து ஆரம்பமாகிறது இப்புதிய பயணம். காலகாலமாய்ப் பூக்கள் பெண்களின் குறியீடாய்த் துலங்கி வருகின்றன. ஒரு பெண் கருவென உருக்கொள்கிறாள், பிறக்கிறாள். குழந்தையாய், சிறுமியாய், கன்னியாய், இளம்பெண்ணாய், பின் மூத்துதிர்ந்து போகிறாள். அரும்பொன்று உருவாகிப் பிஞ்சாகிக் காயாகிக் கனியாகி விதைதூவி அழிகின்றது. இங்கே கருவறை தொட்டுக் கல்லறை வரைக்கும் பெண் நடக்கும் பாதைகளை, அவள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைக் கொஞ்சம் நெருங்கித்தான் பார்ப்போமா?

"பேசும் மணிமுத்து ரோஜாக்கள்
பிள்ளைகள் எல்லோரும் ராஜாக்கள்"

என்கின்ற பாடல் காலக்காற்றோடு சேர்ந்தோடி இன்றும் நெஞ்சில் சந்தம் சுமக்கின்றது. குழந்தைகள் வாழ்வின் செல்வங்கள். அழகும் மென்மையுமான அற்புதமான ரோஜா மலர்கள். இங்கு பெண்ணென்றும், ஆணென்றும் பேதம் இல்லை. எல்லோரும் ராஜாக்கள். இப்பாடலைப் பொறுத்தவரை செய்தி இது. ஆனால், சமூகத்தின் உண்மை நிலைப்பாடு என்ன? ஒரு பெண் குழந்தையின் பிறப்பும், ஆண் குழந்தையின் பிறப்பும் இங்கு சமமாக நோக்கப்படுகின்றனவா? ஒரு பெண்ணின் வாழ்க்கை வீச்சு, அவள் தாய்வயிற்றிலிருந்து வெளிவருங் கணந்தொட்டுப் பிரச்சினைக்குரிய ஒன்றாகவே இருக்கின்றது.

பிரசவ விடுதியின் வாயிற்புறம் - ஒரு மனிதர் அங்குமிங்கும் பரபரப்பாக நடக்கிறார். அவரது மனைவிக்கு இன்னும் சொற்பநேரத்தில் குழந்தை கிடைத்து விடும். சில நிமிடங்கள் கழித்து அவர் வெளிப்புறமாக நடந்து வருகிறார். நடையில் தளர்வு. வெளியே நிற்கும் அவரது நண்பருக்குக் கேட்காமலே விஷயம் விளங்கிவிடுகிறது. அடுத்ததும் பெண்ணாகப் பிறந்துவிட்டிருக்கிறது அவருக்கு. எமது சமூகத்தில் இது ஒரு பொதுவான காட்சியாக உள்ளது. பெரும்பாலான பெண்குழந்தைகளின் வரவுகள் முகச்சுழிப்புக்களின் மத்தியிலே நடந்து முடிகின்றன. குழந்தைகள் இல்லாதபட்சத்தில் அல்லது தமது முதலாவது குழந்தையாகப் பெண்குழந்தைகளின் பிறப்பைப் பெற்றோர் நேசிக்கின்றனர். இரண்டாவது குழந்தையும் பெண்ணாகப் பிறந்துவிட்டால் 'மற்றதுமா' என்ற மனச்சலிப்பும், மூன்றாவதும் பெண்ணானால் "எல்லாம் இப்பிடியா?" என்று வாழ்வழிந்ததான சோர்வும் எமக்குப் புதிதல்ல. பெண்குழந்தைகளின் எண்ணிக்கை

## ஏன் பெண்ணென்று...

குடும்பத்தில் அவர்கள் நேசிக்கப்படுவதில் பங்குவகிக்கிறது. இது இன்று நேற்றல்ல, தொன்று தொட்டு வருகின்ற எம்மண்ணின் நிலைப்பாடு. "ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" எனும் முதுமொழி அதற்குச் சான்று சொல்லும். ஆனால், எட்டும் பெண்களாய்ப் பிறந்தும், அனைவரும் சாதனை உச்சங்களில் வாழ்ந்ததும் உண்டு. பத்துப்பிள்ளைகளும் ஆண்களாய்ப் பிறந்து கெட்டழிந்து போனவர்களும் உண்டு. நாம் இவற்றைச் சிந்திக்கவும், சீர்தூக்கிப் பார்க்கவும் வேண்டியநிலையில் உள்ளோம்.

ஒவ்வொரு குழந்தையும் இளந்தளிர். தன்னம்பிக்கை மீதுரத் தளிரிலை துளிர்த்து, தன்வேர் கொள்ளும்படி, அவர்களை வளர்க்க வேண்டியது பெற்றவர் கடமை. குழந்தைகளை வளர்ப்பதில் அடிப்படைத் தேவைகள் அல்லது செலவுகள் ஒரேமாதிரியானவை. எனினும், வளரும்போக்கில் பெண்பிள்ளையின் செலவு அதிகமாகிச் செல்வதையும் திருமண வயதை அவள் அடைகின்றபோது, அவள் ஒரு குடும்பச்சுமையாக மாறுவதையும் மறுப்பதற்கில்லை.

மேலைத்தேசங்களில் இந்நிலை இருப்பதாக நாம் திட்டவட்டமாகக் கூறமுடியாது. தூரதேசத்தில் இருபது வருடங்களுக்கு மேலாக வசித்துவரும் பெண்மணி ஒருவரை சந்தித்தபோது- 'பெண் குழந்தைகள் பிறக்கும்போதே வெறுக்கப்படத் தக்கநிலை அங்கு காணப்படுகிறது?' என்ற கேள்விக்கு அவர் விபரமாகவே பதிலளிக்கிறார். குழந்தைகளின் பராமரிப்புச் செலவு அங்கு அதிகம் ஆகவே ஆணோ, பெண்ணோ அதிகம் பிள்ளைகளை அவர்கள் பெற்றுக்கொள்வதில்லை.

மேலும், பிள்ளைகள் இங்கு போலன்றி, குறித்த சிறுபராயந் தொட்டே சுயாதீனமாக இயங்கத் தொடங்கி விடுகிறார்கள். அதனால், திருமண காலத்துச் சுமைகளாக அங்கு பெண்கள் இருப்பதில்லை. ஆண், பெண் சமத்துவநிலை இதனை ஆக்கியிருக்கிறது என்றார் அவர். ஆனால், அங்கும் சகோதரிகளின் சீதனத்தொகை சேர்ப்பதற்காக இலங்கையிலிருந்து வந்த இளைஞர் கூட்டம் கடினவேலைகள் செய்வதைக் காணமுடிகிறது என்றார்.

பெண்ணின் திருமண வயதில்- அவள் எதிர்கொள்ளப்போகின்ற சீதன நெருக்கடி பற்றிய அச்சுறுத்தலும் பெண் குழந்தைகளின் பிறப்பை வெறுக்க வைக்கிறது எனலாம். யாழ்ப்பாண சமூகத்தைப் பொறுத்தவரை பெண்கள் நீர்ப்பரப்பைத் தாண்டி எடுத்துச் செல்லப்பட வேண்டிய பஞ்சுப் பொதிகளாகவே உள்ளனர். வாழ்க்கைக் கடலில் நடக்க நடக்க, நீருறிஞ்சிக் கனக்கும் பஞ்சுப்பொதிகள் அவர்கள். ஒவ்வொரு குடும்பத்தின் ஆண்மகனும்- தந்தையாகவோ, சகோதரனாகவோ இருக்கின்றான். பெண்பிள்ளைகள் 'கரை சேரும்'வரை ஆண் சகோதரர்கள் திருமணம் செய்துகொள்வது சரியல்ல என்ற மரபும் இங்குண்டு.

"நானொரு
பெண்
நானொரு
வீடு
நானொரு
சமையலறை
ஒரு வாழ்க்கைக்குத்
தேவையானவை எவையெவையோ
அவை யாவும் கூட
நானாக இருப்பினும் கூட
என் இனிய நண்பரே
நான் ஏன் பாதியாக
முழுமையற்றிருக்கிறேன்.
நீரே சொல்லும்?"


பஞ்சாபிக் கவிதையொன்றின் கேள்விக்கு எமது பதில் என்ன?

காலகாலமாகப் பெண்ணைத் தனித்தியங்கும் வல்லமையற்றவளாகவே இலக்கியங்கள் கூறும். அவளைக் கொடியாக, பூவாக, நிலவாக, தென்றலாக, தேனாக, தெய்வமாகக் கூடக்காட்டி, அவள் அவ்விதம் நடந்துகொள்வதை வேண்டி நிற்கிறது சமூகம். உண்மையில் இவற்றின் மேலாக அவளொரு பெண், மென்மையான உணர்வுகள் நிறைந்த பூவான அவளிடம் - புயல் முகமும் உண்டு. காலத்தின் போக்கு பெண்ணின் சுயத்திற்கு மதிப்பளிக்கின்றது. ஆணுக்கு நிகராய் அவள் அரங்கேறும் காலம் இது! ஆனாலும், பெண்குழந்தைகளின் வரவு எமது சமூகத்தில் வெறுப்பெனும் இருட்டினுள் மூழ்கியே உள்ளது. அங்கு ஒளிர்வினை ஏற்கவல்லவர் யார்? எப்போது அது நிகழும்?

*(பயணம் தொடரும்)*



# போண்டா



**தேவையான பொருட்களும் அளவுகளும்**

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு | - 1/2 kg |
| வெங்காயம் | - 100g |
| தேங்காய் எண்ணெய் | - 1/2 l |
| கடலை மா | - 1/2 kg |
| தனிமிளகாய்த் தூள் | - அளவாக |
| உப்புத்தூள், கேசரிப்பவுடர் | - சிறிதளவு |
| கடுகு, பெருஞ்சீரகம் | - அளவாக |
| கறிவேப்பிலை | - தேவையான அளவு. |

**செய்முறை:-**

போண்டா செய்வதாயின் முதலில் உருளைக்கிழங்கினை அவித்தெடுத்துச் சுத்தம் செய்த பின், ஒரு பாத்திரத்தினுள் போட்டுப் பிசையவும். பிசையும்போது மிளகாய்த்தூள், உப்புத்தூள் ஆகியவற்றைச் சேர்த்து நன்றாகப் பிசையவும். பின்னர் வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை ஆகியவற்றைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டியபின் சிறிது எண்ணெய்விட்டு வதக்கிக்கொள்ளவும். வதக்கும்போது பெருஞ்சீரகம், கடுகு ஆகியவற்றையும் சேர்த்து வதக்கவும். அதன்பின் ஒரு அளவான உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும். பின் கடலை மாவை அரித்தெடுக்கவும். அரிக்கும்போதே பேக்கிங் பவுடர் சேர்த்துக் அரித்துக் கரைக்கவும், பின் உருட்டிய உருண்டைகளை கரைத்த மாவினுள் தோய்த்தெடுத்து, பின் கொதிக்கும் எண்ணெயில் பொரித்துப் பொன்னிறமாக வந்ததும் எடுத்து மதிய உணவுடனும், தேநீருடனும் சுடச்சுடப் பரிமாறலாம்.

# கண்களில் கருவளையம் நீங்க...



- ★ விளக்கெண்ணையைக் கண்களின் மீது தடவி 15 நிமிடம் கழித்துக் கழுவுங்கள்.
- ★ கற்றாளையின் சோற்றுப் பகுதியைப் பன்னீருடன் கலந்து கண்களுக்கு அடியில் தடவி 10 நிமிடத்துக்குப் பின்னர் கழுவலாம்.
- ★ பேரீச்சம்பழம் 1, கடலைப் பருப்பு, 4 குங்குமப்பூ என்பவற்றை எடுத்து முதல் நாள் இரவு நீரில் ஊறவைக்கவும். அடுத்த நாள் அவற்றை எடுத்து அரைத்துக் கருவளையம் மீது தடவி 15 நிமிடத்தில் துடைக்கவும்.
- ★ இரும்புச் சத்துள்ள உணவுகளை அதிகம் சாப்பிட்டால் கருவளையம் நீங்கும். அதாவது கரட், பீற்றூட், கீரை வகைகள், பப்பாளி, மாம்பழம் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்வது நன்று.



- ★ முட்டையின் வெள்ளைக் கருவைக் கண்களின் அடியில் தடவி 10 நிமிடத்தில் குளிர்ந்த நீரால் கழுவவும். கருவளையங்களும் குறையும், சுருக்கங்களும் மறையும்.
- ★ பார்வையில் கோளாறுகள் இருந்தாலும் கருவளையம் வரலாம். இதற்குக் கண் மருத்துவரின் ஆலோசனையுடன் சரியான கண்ணாடி அல்லது லென்ஸ் உபயோகித்தால் சரியாகிவிடும்.

# கவிதைச் சோலை

## எப்போது வருகிறாய்?

எனது மௌனத்தை
மொழிபெயர்த்து விட்டு
நீ மௌனமாயிருப்பதேன்?

உடைத்துப் பார்த்துவிட்டு
உதாசீனம் செய்வதற்கு
இது ஒன்றும்
கல்லலல்ல மனது

உன் நினைவுகளால்
என் கனவுகளெல்லாம்
கவிதைகளாகவே கன்னி கட்டியிருக்கின்றன.
உன் தரிசனத்தின் பின்தான்
தாம் புஷ்பிக்கப்போவதாக
அறிக்கை விட்டிருக்கின்றன
நீ எப்போது வருகிறாய்?
நீ வந்து போனபின்தான்
என் கவி அகலிகை
விமோசனம் பெற இருக்கின்

நீ பார்க்கிற
பூக்கள்ளயெல்லாம்
என் முகமாகவே
நினைத்துக் கொள்
அவற்றில் தெரிகிற
பனித்துளிகளை எல்லாம்
என் கண்ணீர்த் துளிகளென்றே
கருதிக் கொள்

எப்போது வருகிறாய்
அல்லது
உன் சேதிகளைச் சொல்லி
ஒரு சோடி
வண்ணத்துப் பூச்சிகளையாவது
அனுப்பி வைக்கிறாயா?



*மசூறா ஏ.மஜீட்*

## மீண்டும் வளரும்



கவிதை...
அது நீயே...
அத்தனையும் கண்ணீர்
கதையாய்
என் ஏட்டில்
விதைத்தவனே
எழுந்து வா...
இருண்ட நம் வாழ்வில்
உதயம் உண்டாக்கலாம்
உதிரிப்பூவிற்கு
வாசம் உண்டு
உலர்ந்த உன் உடலில்
என் உயிர் உண்டு
நிலவே...
மறைந்து என் வாழ்வை
மயானமாக்காதே...
சமாதிகளில் சந்ததி உண்டாக்கலாம்
முடிந்த உன் விதிக்கு
முற்றுப் புள்ளி வைக்கலாம்
எழுதிய தீர்ப்பை
திருத்தி எழுதலாம்
எழுந்து வா...
உதிரிப் பூக்களை
ஒட்டவைக்கலாம்
எழுந்து வா...

- விஜயலட்சுமி.

# தியானத்தால் கிடைக்கும் புத்துணர்ச்சியை சிலை செய்வதன்மூலம் பெறமுடிகின்றது!

**குறைந்தளவு முதலீட்டுடன் சிலை செய்யும் தொழிலைச் செய்ய முன்வரும் பெண்கள், வீட்டிலிருந்தபடியே அதிகளவான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், அவர்களுக்கு நிறையப் பொறுமை, கலை நுணுக்கம், செய்நேர்த்தி, நேரம் என்பன தேவை என்கிறார் சோதிவேம்படி, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி சாந்தா நித்தியானந்தன்.**

திருமதி சாந்தா நித்தியானந்தனின் வீட்டுக்குள் நுழைந்தால் வீட்டினுள்ளே அழகிய பொம்மைத தொழுவங்கள் ஆங்காங்கே காட்சியளிக்கின்றன.

அழகழகான உண்டியல்கள், முகமூடிகள், பிள்ளையார், இலக்சுமி, முருகன், கிருஷ்ணர், சிவன் போன்ற அத்தனை சிலைகளும் அதற்கேற்ற வர்ணங்களுடன் கூடிய கலையம்சங்களாகக் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. அத்தனையும் சாந்தாவின் கைவண்ணத்தில் உருவானவை. கழிவுக் கடதாசிகளை நனைத்துப் பசை பூசி, படைபடையாக ஒட்டி அச்சில் போட்டு, உருவங்களாக அமைக்கப்பட்டு, உள்ளே சமநிலையாக (**Balance**) நிற்பதற்கு ஏற்றளவில் மணல் போட்டு வர்ணம் பூசித் தயாரிக்கப்பட்ட சிலைகள் இவைகள்.



இந்தத்துறையில் ஆர்வமுள்ள பெண்கள் வீட்டிலிருந்தபடியே வருமானத்தைப் பெருக்கக்கூடிய வேலை இது. பண முதலீடு அதிகமாகத் தேவைப்படாது. ஒரு சிறிய அளவிலான முதலீட்டுடன் ஆரம்பித்தால், பின்னர் படிப்படியாக முன்னேறலாம். இதைச்செய்ய முன்வருபவர்களுக்கு நிறையப் பொறுமை, கலை நுணுக்கம், செய்நேர்த்தி, நேரம் என்பன தேவை. நேர்த்தியாக உருவாக்கிய சிலைகளுக்கு உள்நாட்டிலும் (அதாவது அழகுப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள்) வெளிநாட்டிலும் கிராக்கி அதிகம் என்கிறார் சாந்தா.

ஆரம்பத்தில் பொழுதுபோக்காகத்தான் இதைச் செய்யத் தொடங்கினேன்.

1980 ஆம் ஆண்டு தொடக்கம் எனது அக்காதான் சிலைகள் செய்யும் கலையைப் பயின்று, மிகவும் அழகாகவும், நுணுக்கமாகவும் செய்து வந்தார். அப்போது நான் அதைப் பார்ப்பேன். ஆனால், செய்யப்போனதில்லை. எனினும் ஒரு ஆர்வம் அதில் இருந்தது. பின்னர் அக்கா கொழும்பிற்கு வேலை கிடைத்துப்போன பிறகு, சிலைகள் செய்கிற அச்சும் மிகுதிப் பொருட்களும் வீட்டில் இருக்க நான் ஒரு பொழுதுபோக்காக ஆரம்பத்தில் சில உருவங்களைச் செய்து, பின்னர் நான்கு பெண்பிள்ளைகளை என்கூட வேலைக்கு அமர்த்தி அதையொரு கலைத்தொழிலாகவே செய்து வருகிறேன்.

சாதாரணமாக எந்தச் சிலையை நாங்கள் செய்வதாக இருந்தாலும்,



கழிவுக் கடதாசிகளை எடுத்து நனைத்து கோதுமை மாவில் தயாரிக்கப்பட்ட பசையினால் கடதாசிகளை ஒட்டவேண்டும். சாதாரணமாக ஒரு பிறிசில் போர்ட் அளவு தடிப்புக்கொண்ட படையாக ஒட்டிக் காயவிட்ட பின்னர், அதையெடுத்துத் தேவையான அச்சுக்குள்போட்டு, அந்த உருவத்தை வெட்டி எடுத்துக் காய வைக்கவேண்டும். காய வைத்த பின்னர் அந்த உருவத்தை எடுத்து அதற்கேற்ற மாதிரி அழுத்தமாக மடித்து சமநிலையாக நிற்பதற்காக உள்ளே சிறிதளவு மண் போட்டு ஒட்டிவிட்டு, நூலினால் தைத்து- தைத்த அடையாளம் தெரியாமல் மேலே கடதாசியினால் ஒட்ட வேண்டும். பின்னர், கரடுமுரடாக இருக்கும் இடங்களை அழுத்தமாகச் சீவி கடதாசி, பசை, சோக் பவுடர் மூன்றையும் சேர்த்துக் கலந்த கலவையினால் உருட்டி, அழுத்தமாக மினுக்கிக் காயவைக்கவேண்டும்.

நன்றாகக் காய்ந்ததன் பின்னர் எடுத்து மணல் பேப்பர் போட்டுத் திரும்பவும் அழுத்தமாக மினுக்கிவிட்டு, மண்ணெண்ணெய் கலந்த வர்ணம் இரண்டு முறை அடித்துக் காயவைத்து திரும்பவும் மணல் பேப்பரால் அழுத்தித் துடைக்க வேண்டும். பின்னர் வெள்ளை நிற வர்ணம் அடித்துக் காயவைத்து விட்டுக் கடைசியாக உருவத்திற்குத் தேவையான ஒயில் பெயின்ற் அடிக்க வேண்டும். கண் வைப்பது மிகவும் கஷ்ரமான வேலை. சரியாக உன்னிப்பாகக் கவனித்துக் கண் வைக்க வேண்டும். கடவுளின் சிலைகளாக இருந்தால் முடிக்குத் தேவையான **Gold Dust** வாங்கி **oil** இல் கலந்து அடித்து அழகிய ஒரு சிலையைப் பெற்றுக் கொள்ளலாம்.

கூடுதலாகக் கிறிஸ்மஸ் பண்டிகைக் காலங்களில் - கிறிஸ்மஸ் பாப்பா முகமூடி அதிகளவில் விற்பனையாகும். தை, மாசி, பங்குனி, ஆனி, ஆவணி போன்ற நல்ல நாட்கள் நிறையவுள்ள மாதங்களில் அன்பளிப்புப் பொருளாகக் கொடுப்பதற்காக அதிகமான சிலைகள் விற்பனையாகும். என்னிடம் மூன்று கடைகள் வாடிக்கையாகச் சிலைகளைப் பெற்று விற்பனை செய்து வருகிறார்கள். அதைவிடத் தனியாக வீட்டிலும் விற்பதுண்டு. இப்போது- அதிகமாக வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் இவற்றை கூடுதலாக விரும்பி வாங்குகிறார்கள். பாரம் இல்லை, உடையாது. அதனால், இவற்றை வாங்கி வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் சிலைகள் செய்கின்ற இடம் பெரிதாக இல்லை. என்னிடம்கூட 10 வருடத்துக்கு மேல் சிலை செய்கிற தொழிலில் ஈடுபாடுகொண்ட பெண்பிள்ளை இருக்கிறார். ஆனாலும், நுணுக்கமாகப் வர்ணம் பூசிக் கண்வைத்துச் செய்யமாட்டார். எல்லோரும் நினைப்பதுபோல இதை இலகுவாகக் கற்றுக்கொள்ளலாம் என்றும் இல்லை.


ஒரு சிலை செய்ய உட்கார்ந்தால் நேரம் போவதே தெரியாது. அந்தளவு முழுக்கவனம் செலுத்துவதால் தியானம் செய்வதற்கு உண்டான புத்துணர்ச்சி கிடைக்கும் என்கின்றார்.

**சந்திப்பு:**
**உஷா, கலானந்தி.**

# MOSS ROSE

**துணியில்** Moss Rose


**பூச்செய்யும் முறை**



கஞ்சியிடப்பட்ட பப்பிளின் துணி - Orange, பச்சை
கட்டுக்கம்பி
பைண்டர் கம்
றூள் - பெரியகுண்டு, நடுத்தர குண்டு
Flower Tape
பஞ்சு
மட்டை

**செய்முறை -**

Moss Rose செய்வதாயின் கஞ்சியிடப்பட்ட Orange பப்பிளின் துணியில் பெரிய இதழ் Cutting வைத்து, இரண்டு Cutting வெட்டி எடுக்கவும். நடுத்தர இதழ் இரண்டும், சிறிய இதழ் இரண்டும் மொட்டிற்கு மொட்டு வடிவிலான இதழ் நான்குமாக வெட்டி எடுத்து, எல்லாவற்றிற்கும் சிறிதளவு நடுவில் வெட்டிய பின் இதழ்களைக் கொஞ்சம் நீளமாக வெட்டிவிடவும். பெரிய, நடுத்தர இதழ்களைப் பெரிய குண்டு றூளால், றூள் செய்த பின் பின்பக்கம் திருப்பி நடுவில் றூள் செய்யவும். மொட்டு வடிவிலானவற்றைப் பெரிய குண்டால் றூள் செய்யவும். பின் கட்டுக் கம்பியின் நுனியை வளைத்துச் சிறிதளவு பஞ்சு நுனியில் ஒட்டிய பின், நான்கு மொட்டு இதழ்களையும் சுற்றிக் கட்டியபின் சிறிய, நடுத்தர, பெரிய இதழ் என்ற ஒழுங்கில் ஒட்டவும். இறுதியாகப் புல்லியும் சேர்த்து ஒட்டலாம். மொட்டுச் செய்வதாயின் 4 மொட்டு வடிவிலான இதழை வைத்து ஒவ்வொன்றாகக் கட்டிய பின் இறுதியில் புல்லியைச் சேர்த்து ஒட்டலாம். பின் கட்டுக் கம்பிக்கு Flower Tape சுற்றவும். இலை செய்வதாயின் இலை Cutting வைத்து வெட்டிக் கட்டுக்கம்பிக்கு Flower Tape சுற்றிக் கம்பியுடன் சேர்த்து ஒட்டிக் கைக்குண்டால் றூள் செய்யவும். இறுதியாக மொட்டு, இலை, பூ ஆகியவற்றை ஒழுங்குபடுத்தி அழகான ஒரு பூச்செண்டைப் பெறலாம்.



# தலைவி நீ தலை நிமிர்...!



நீ ஓர் இலக்கை அடைவதற்காகத் திட்டமிட்டுச் செயற்படும்போது உன்னோடு சேர்ந்து செயற்பட ஒரு சிலரோ, பலரோ இருப்பார்கள்.

ஒரு காரியாலயமோ, தொழில் நிறுவனமோ என்றால் சக பணியாளகள் – ஒரு வீடு என்றால், அந்தக் குடும்ப அங்கத்தினர் சேர்ந்து உன்னுடன் செயற்படும்போதுதான் குறித்த திட்டத்தில் வெற்றிபெறமுடியும். இவர்களை ஏற்றவாறு தகுந்த பணிகளைக் கொடுத்து, உச்சமான பயனை அவர்களிடமிருந்து பெறுவது முக்கியமான ஒன்று.

சில நிறுவனங்கள் அங்கு பணியாற்ற ஏற்றவர்களான சிறந்த பணியாளர்களைத் தெரிவு செய்திருப்பார்கள். அரசியல் தலையீடுகள், சிபார்சுகள், லஞ்சம் என்ற பல்வேறு காரணங்களால் திறமையற்றவர்கள் நியமனம் பெறுவது நமது நாட்டில் சர்வசாதாரணம். அதைவிட, எமது கல்வி அமைப்பு, மக்களின் மனோபாவம் என்பனவும் ஏற்றவர்களை இனங்கண்டு, பணிக்கமர்த்தமுடியாத நிலையை எமது நாட்டிலே உருவாக்கியுள்ளது.

கல்வி கற்கும்போது பிள்ளை விரும்புகின்ற அல்லது சிறப்பாகத் திறமையுடன் செய்கின்ற துறையில் அப்பிள்ளையைக் கற்க ஊக்குவிக்கும் மனோபாவம் எம்மிடம் இல்லை. அப்படிக் கற்கக் கூடியவகையில் கல்வி அமைப்பும்இல்லை. அதிர்ஷ்டவசமாக ஒரு பிள்ளை அப்படிக் கற்றாலும், அந்தப் பிள்ளை அதற்கேற்ற தொழிலைப்பெறும் வாய்ப்பும் இல்லை. இதனால், குளியலறையில் மின்னடுப்பும், குளிர்சாதனப்பெட்டியும் – சமயலறையில் சலவை இயந்திரமும், துணி அழுத்தும் பெட்டியும் பொருத்தப்பட்டது போன்று பணியாளர் நியமனம் பெறும் ஒரு நிலை காணப்படுகிறது.

வீட்டிலே உன் குடும்ப அங்கத்தினர்தான் இருப்பார்கள். அவர்கள் நியமிக்கப்படுவோர் அல்ல.

உடனிருந்து உதவப் போகின்றவர்களை அவதானித்து அவர்களது திறமை, விருப்பு, வெறுப்பு, இயல்பு என்பவற்றைப் புரிந்துகொண்டு, அவர்களுக்கேற்ற பணிகளை வழங்கித் தேவையான அனுசரணை, ஊக்குவிப்பு ஆகியவற்றைக் கொடுத்து வழிகாட்டும் திறமையை வளர்ப்பது மிக அவசியம்.

திட்டங்கள் சிறப்பாக அமையலாம். உன்னிடம் திறமை இருக்கலாம். ஆனால், உடன் பணிபுரிவோரை ஊக்குவித்து, சரியாக வழிநடத்தி, சிறந்த பயனடையத் தவறினால் அனைத்துமே பாழாகிவிடும்.

மனிதர்கள் இயந்திரங்களல்ல. அவர்களது குணாதிசயங்கள் வேறுபடும். இவர்களை ஊக்குவித்து, அவர்களது உன்னதங்களை வெளிக்கொணரச் சிறந்த திறமை வேண்டும். ஒவ்வொருவரிடமும் குணபேதமிருக்கும். எனவே, எல்லோரும் ஒரேவகையில் செயற்படமாட்டார்கள் .ஒரு வேலை செய்யும்போது திறமை காட்டாதவர் வேறொன்றில் திறமையாக இருப்பார். சிலவேளை தாம் திறமையாகச் செய்யும் தொழில் முக்கியத்துவமற்றதென்பதால், தனக்குக் கௌரவம் கிடைக்கவில்லையென்று அவர் அந்த வேலையையும் திருப்தியில்லாமல் செய்யக்கூடும்.

இதுபோன்ற மனப்பாதிப்புகளால் தன்னால் செய்யமுடியாத வேலைகளையும் செய்ய விரும்பி, அதை விடாப்பிடியாகச் செய்வதன் மூலம் அனைத்தையுமே சீர்குலைப்பவர்களிருக்கிறார்கள்.

வேலை சமமாகப் பங்கீடு செய்யப்படாவிட்டாலும், அது சக பணியாளர்களின் மனதைப் பாதிக்கும். பொதுவாகவே தாம் செய்யும் வேலை கஷ்டமானது, மற்றவர் செய்யும் வேலை இலகுவானது என்று கருதும் தன்மை பெரும்பாலோரிடம் காணப்படும். இதனால், மிக அவதானமாக வேலைகள் பங்கிட்டுக் கொடுக்கப்பட வேண்டும். இவற்றை மாற்றிக் கொடுப்பதன் மூலம் மற்றவரின் வேலையிலுள்ள கஷ்டங்களை அவர்களுக்கும் புரிய வைக்கலாம்.

ஒவ்வொருவரும் செய்யும் வேலையில் காணும் சிறப்பை உடனுக்குடன் பாராட்ட வேண்டும். அவர்களது கருத்துக்களைக் கேட்டு அவை சிறந்தவையென்றால் நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் இன்னார் கூறிய ஆலோசனைப்படி நடந்ததால், இவ்வளவு நன்மை வந்ததென்பதை அனைவருக்கும் கூறி அவரைப் பெருமைப்படுத்த வேண்டும். அது குறித்து மேலிடத்திற்குச் சிபார்சு செய்ய முடியுமானால் அதைச் செய்யத் தவறக்கூடாது.

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்.

- *திருக்குறள்.*

# நமது நோக்கு

## சுமுக நிலைக்கு எதிரான யுத்த மனோபாவம்!

யாழ்.மாநகரசபைக் காணியில் இராணுவத் தளம் அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டுவிட்டதாகச் செய்திகள் வெளியானபோதும் - யாழ்.நகர மத்தியிலிருக்கும் இராணுவத் தொகுதியை மக்களது சுமுகநிலைக்குப் பாதிப்பில்லாத பகுதியொன்றுக்கு மாற்றுவதற்கு இராணுவத் தரப்பு தயாரில்லாத நிலையையே காண முடிகின்றது.

நகர மத்தியில் இரு ஹோட்டேல்களையும் 80 இற்கும் அதிகமான வீடுகளையும் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் படைத்தளத்தை - மீண்டும் மக்கள் பாவனையிலிருக்கும் அல்லது பாவனைக்கு வேண்டிய பகுதிகளுக்கே மாற்றுவதற்கு இராணுவத்தரப்பு தீர்மானித்திருப்பதை - நேற்றுமுன்தினம் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு, விஜயம் செய்த - யாழ். பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

கல்லுண்டாய்வெளிப் பிரதேசத்திற்குச் சென்றிருந்தபோது - இப்படியான பகுதிகளிலிருந்து மக்களுக்கு எப்படிப் பாதுகாப்பை வழங்க முடியும்? மக்கள் நடியிருப் புக்களுக்கு அருகிலேயே படைமுகாம் அமையவேண்டும் என்று மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கூறியிருக்கிறார்.

ஏற்கனவே - உயர்பாதுகாப்பு வலயமென்றும், அதற்கு வெளியே படைமுகாம்களென்றும், இராணுவ நிலைகளென்றும் பெரும் பகுதிகளை ஆக்கிரமித்து வைத்திருக்கும் இராணுவத்தரப்பு - இன்னமும் மக்கள் குடிமனைகளை, மக்கள் நடமாடும் பகுதிகளை இராணுவ வலயங்களாக்க வேண்டுமென முனைந்து நிற்பது -

புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் - விடுதலைப் புலிகளுடன் அரசாங்கத்தரப்பு பேச்சுக்களில் கண்ட இணக்கத்தையும் மீறுவதாகவே அமைந்திருக்கின்றது.

யுத்தம் ஓய்ந்துள்ள பொழுதில் - அரசியல் தீர்வொன்றைப் பெறுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகையில் - மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென படைத்தரப்பு வரிந்துகட்டிக் கொண்டு நிற்பது - நகைப்புக்கிடமான விடயமே.

இராணுவத்தரப்பு - மக்களைப் பாதுகாக்க எண்ணுகின்றதா அல்லது மக்களிடையே முகாம் அமைப்பதன் மூலம் தம்மைப் பாதுகாக்க எண்ணுகின்றதா என்பதும் ஆய்விற்குரியது.

எது எப்படியிருந்தாலும் - சமாதானச் சூழல் ஒன்று ஏற்பட்டு வருகையில் - இராணுவத்தின் பிரசன்னம் மக்கள் பகுதிகளில் இடம்பெறுவது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதல்ல.

ஏற்கனவே - மக்களது வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள் எனப் படையினர் தாம் நிலைகொண்டுள்ள பகுதிகளிலிருந்து வெளியேறி - அவற்றை மக்களிடம் மீளக் கையளிப்பதற்குத் தயக்கமும், பின்னடிப்பும், சாட்டுப்போக்குகளும் கூறிவரும்போது -

இன்னமும் புதிதாக ஆக்கிரமிப்புப் போக்கை வளர்த்துக் கொள்வது - இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கும், அதனூடாக அமைதியை உறுதிப்படுத்துவதற்கும் பொருத்தப்பாடானதல்ல.

இன்னொரு வகையில் - மீண்டும், மீண்டும் தமது இராணுவ நலன்களை முன்னிறுத்துவதையே படைத்தரப்பு குறிக்கோளாகக் கொண்டு இயங்குவதையும்- மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

இடம்பெயர்ந்த மக்களது மனிதாபிமானப் பிரச்சினையாக நோக்கப்பட்டுத் தீர்வு காணப்பட வேண்டிய உயர்பாதுகாப்பு விடய விவகாரத்தை - இராணுவ நோக்கில் ஆராய முற்பட்டு - அதன்வழியே முரண்பாடுகளையும், நெருக்கடிகளையும் பெருப்பித்து விட்டிருக்கின்ற நிலையில் -

இராணுவ முகாம்களை மீளமைத்தல் என்பதும்- முற்றிலும் இராணுவ நோக்கிலேயே பார்க்கப்படுவது- அமைதியையும் அதற்கான முயற்சிகளையும் தீவிரமாகவே பாதிக்குமென்பதைப் படைத்தரப்பு புரிந்துகொள்ள வேண்டும்.

மக்கள் நலனில் அக்கறை செலுத்தாது - இன்னமும் யுத்த மனோபாவத்துடன், நியாயமற்ற பாதையில் இராணுவம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாயின் - அதனை மக்கள் எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதுடன், அது நிலைமையை இன்னமும் சிக்கலாக்கிவிடுமென்பதை உணர்ந்து - அரசாங்கம், இவ்விடயத்தில் தனது உறுதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்திலிருக்கிறது.

பொதுசன விருப்பத்திற்கு மாறான செயல்களில் படைத்தரப்பு அடாத்தாக இறங்குவதைக் கட்டுப்படுத்தி - மக்கள் நம்பிக்கையை பெறும்விதமாக இந்த விடயத்தில், அரசாங்கம் செயற்பட வேண்டுமென்றே மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

# தமிழின ஒற்றுமையைப் பலப்படுத்த முனைப்புடன் ஒன்றிணைவோம்!

## யாழ்.மாவட்ட மேதின ஏற்பாட்டுக்குழு அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

உழைக்கும் மக்கள் தமது உரிமைக்காக இரத்தம் சிந்திப் போராடி, தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதன் மூலம் அவர்களின் மனங்களில் நம்பிக்கையினையும், புத்துயிர்ப்பையும் ஏற்படுத்திய நாள் மேநாள்.

உலகத்தொழிலாளர் திருநாளாகிய மேதினத்தில் -உலக உழைப்பாளிகளின் உன்னதமான அத்தினத்தில் - நாம் ஓர் மாபெரும் பேரணியை நடாத்தி, எமது ஒன்று திரண்ட சக்தியை, உரிமையை, உறுதிப்பாட்டை உலகிற்கு வெளிக்காட்ட அணிதிரள்வோம் என யாழ்ப்பாண மாவட்ட மேதின ஏற்பாட்டுக்குழு அறைகூவல் விடுத்துள்ளது.

தேசிய இனங்களின் எழுச்சியே இன்றைய உலக நியதியாகிவிட்ட சூழலில், ஒடுக்கப்பட்ட இனங்களின் உழைக்கும் மக்களுடன் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து - பறிக்கப்பட்ட தமது உரிமைக்காக உரத்துக் குரல் எழுப்பும் இன்றைய நிலையில் - சிங்கள, பௌத்த பேரினவாதிகள் தமிழினத்தை அழித்தொழிக்க இடையறாது திரைமறைவில் தீட்டிவரும் சதிகளையும் நாம் மறந்து வாழமுடியாது.

இனச்சிக்கலின் தீர்வினை எட்டுவதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கான நல்லெண்ண வெளிப்பாடுகளை மேற்கொண்டிருந்த நிலையிலும், அதற்கான ஒத்துழைப்பையும், தூண்டுதல்களையும் பன்னாட்டுச் சமூகம் முன்னெடுத்தபோதும், பேரினவாதப் போர்வெறி கொண்ட சிங்களத்தேசம் மனச்சுத்தியுடன் ஏற்றுக்கொள்ளாதநிலையில் திரைமறைவில் போருக்கான நகர்வில் தன்னைத் தயார்ப்படுத்தும் நிலைமையை நாம் மறைக்க முடியாது, கண்டிக்காமலும் இருக்கமுடியாது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி எமது மக்களுக்கு கிட்ட வேண்டிய வாழ்வியலில் எந்தவொரு மாற்றத்தையும், முன்னேற்றத்தையும் அனுபவிக்கமுடியாத நிலையில், துன்பத்தின் மேல் துன்பங்களை மக்கள் தினமும் அனுபவிக்கிறார்கள்.

எனவே, நாம் எமது தன்னாட்சி உரிமையை நிலைநிறுத்த, தமிழ் தேசியத்தைப் பேணிக்காக்க - உரிமையுடனும், உணர்வுடனும் உரத்தகுரல் எழுப்பி எமது ஒற்றுமையைப் பலப்படுத்த அனைத்து மக்களையும் முனைப்புடன், பேரணியிலும் மற்றும் எழுச்சி நிகழ்விலும் ஒன்றிணையுமாறு தேசத்தின் சார்பில் வேண்டுகிறோம் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## அமைச்சர் ஒருவருக்கு எதிராக ஐ.தே.க. ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

பொதுநிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பிறேமரத்ன ஆகியோர் மீது ஐக்கிய தேசியக்கட்சி ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.கவின் நிர்வாகச்சபைக் கூட்டத்திலேயே பிரதமர் இத்தகவலை வெளியிட்டார். அமைச்சர் வஜிர அபேவர்த்தன மீது இரண்டு பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டுக்களும், வேறு பல அதிகாரத் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டிருப்பதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் பிறேமரத்ன - சீதுவ பொலிஸ் நிலையத்தில் வைத்து சந்தேக நபரை மீட்டுச்சென்றது தொடர்பாகவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவர்கள் மீதே கட்சி ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.




பொ.ஐ.மு. அரசாங்கத்தினால் சேவையிலிருந்து நீக்கப்பட்ட 69 இராணுவத்தினர், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

# உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் பருத்தித்துறை நீதிமன்ற வளாகம்

## அமைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி

(வடமராட்சி)

பருத்தித்துறை இராணுவப் பாதுகாப்பு வலயத்தினுள் நவீன வசதிகளுடன்கூடிய நீதிமன்ற கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது. இந்தப் பகுதிக்குள் நீதிமன்றக் கட்டடங்களை அமைப்பதற்கான அனுமதியினைப் பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளின்போது, பருத்தித்துறை நகரில் அமைந்துள்ள நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதிபதிகள் வாசஸ்தலம், மறியற்சாலை அடங்கிய கட்டடத்தொகுதிகள் சேதமடைந்தன. இதனால், நீதிமன்றம் பருத்தித்துறையில் மீள இயங்கமுடியாத நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து தனியார் கட்டடம் ஒன்றில் மேற்படி இரு நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன.

குடாநாட்டைப் படையினர் கைப்பற்றியதையடுத்துப் பருத்தித்துறையிலிருந்த பழைய நீதிமன்றக் கட்டடத் தொகுதி - படையினருடைய பாவனையில் இருந்தது. தற்போது இது நீதிமன்றத்திடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் இருந்த கட்டடச் சிதைவுகளை அகற்றி, நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்படவிருக்கின்றது.

இதற்கு முன்னோடியாக - இந்த நீதிமன்றக் காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, வேலிகள் அமைக்கும் பணி முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

(23)

## உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சமர்ப்பிக்க

# சர்வதேச நிதிநிறுவனங்கள் இணைந்து அபிவிருத்தித் திட்ட அறிக்கை தயாரிப்பு

(கொழும்பு)

மூன்று சர்வதேச நிதி நிறுவனங்கள் இணைந்து இலங்கைக்கான புனரமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய முன்னேற்ற அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளன.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவே இந்த முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்திருப்பதோடு, அரசாங்க மற்றும் புலிகள் தரப்புக்களுக்கு அனுப்பிவைத்துள்ளன.

ரோக்கியோவில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும், இதன்படியே வட-கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள புனரமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும்

# சார்ஸ் தொற்று நிமோனியா



சார்ஸ் நோயின் தாக்கம் கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் சீனாவின் "குவாங்டொங்" மாநிலத்தில் காணப்பட்டிருந்தும் - அதனை உரியகாலத்தில் தெரியப்படுத்தத் தவறியதன் காரணத்தால், இவ்வருடம் இரண்டாம் மாத நடுப்பகுதியிலே இனங்காணப்பட்டதாகப் பத்திரிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இந்நோயின் தாக்கம் வியட்நாம், சீனா, கொங்கொங், சிங்கப்பூர், மலேசியா, தாய்வான், தாய்லாந்து, கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நியூசிலாந்து, பிரிட்டன் உள்ளிட்ட இருபது நாடுகளில் பரவத் தொடங்கியுள்ளது.

இதுவரையில் மொத்தமாக 98 பேர் உயிரிழந்துள்ளதுடன், 2500 இற்கு மேல் நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இவ்வாண்டின் ஆரம்பத்திலே உலகினைக் கிலிகொள்ள வைத்துக் கொண்டிருக்கும் ஒருவித கொடிய தொற்று நிமோனியா ஆகும்.

தற்போது எமது பிரதேசமும் தென்னிலங்கை ஏனைய நாடுகளிலிருந்து பல்வேறு வகையான தேவைகளின் பொருட்டு வந்து தங்கிச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கச் செய்வதால், இந்நோயின் தொற்றிலிருந்து பாதுகாக்க விழிப்பாக இருக்கவேண்டியது அவசியமாகும். முதற்கட்டமாக, இந்நோய் தொடர்பாக அனைவரும் அறிய வேண்டியது அவசியமானதாகும். இந்நோயின் தாக்கத்தால் மருத்துவ உத்தியோகத்தர்கள், மருத்துவ ஆராய்ச்சியாளர்களும் இறந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**இது ஒரு வைரஸ் நோயாகும்**

நோய்க்கான நோயரும்பு காலம் 3-7 நாட்களாகும்.

***நோய்க்கான அறிகுறி:***

தொற்றின் ஆரம்பத்தில் குளிருடன் கூடிய காய்ச்சல், அலுப்பு, உடற்குற்றுழைவு, தலையிடி போன்றவற்றுடன், தடிமல் குணமும் சேர்நது காணப்படும். பின்பு இந்நிலையில் இரத்தப்பரிசோதனை செய்து பார்த்தால், வெண்குருதிச் சிறுதுணிக்கையில் (WBC) குருதிச் சிறுதட்டுக்களின் எண்ணிக்கையும் குறைவடைந்து காணப்படலாம். பின்பு 3-7 நாட்கள் கழித்து வரட்சியான இருமலும், மூச்சுவிடச் சிரமமும் ஏற்படும். இந்நிலையில் நெஞ்சினைப் பரிசோதித்துப் பார்க்கும்போது அல்லது "X" கதிர்ப் படம் எடுத்துப் பார்க்கும்போது நியூமோனியாவிற்குரிய தடயங்கள் தென்படும்.

***நோய் தொற்றும்முறை:***

இந்நோய்த் தொற்றுள்ளவர் இருமும்போதும், தும்மும்போதும் சுவாச வழியூடாக வெளியே தெறிக் கின்ற திரவத்துளிகளில் உள்ள கிருமிகள் மூலமும், நெருங்கிப் பழகும்போது மூக்கால் வழியும் நீர், சளி போன்றவற்றிலுள்ள கிருமிகளாலும் தொற்றுகின்றது.

எனவே, இந்நோயின் தாக்கத்திலிருந்து விடுபடவேண்டுமாயின், நோய் வந்த பிறகு குணப்படுத்துவதைவிட - நோய்வரும் முன்காப்பு நடவடிக்கைகளில் முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டும்.

**கீழ்க்காணும் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடியுங்கள்.**

✦ நோய்பரவும் இடங்களுக்கு பயணம் செய்வதனை இயலுமான வரை தவிர்க்கவேண்டும்.

✦ நோய்பரவும் சூழ்நிலை காணப்பட்டால், தற்காலிகமாக அவ்விடங்களில் ஒன்றுகூடும் நிகழ்வுகளைத் தவிர்க்கவேண்டும்.

✦ அவசியதேவையின்றி மருத்துவமனைக்குச் செய்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

✦ சுவாச வழித்தொற்றின் அறிகுறியுள்ள அனைவரும் தாமதமின்றி மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவேண்டும்.

✦ தொற்றுப்பரவும் சாத்தியமுள்ள இடங்களில் வாழும் அனைவரும் வாயையும், மூக்கையும் மூடி மாஸ்க் (வாய், மூக்குக்கவசம்) அணிந்துகொள்ளவேண்டும்.

✦ ஆட்களுடன் நெருங்கிப் பழகுவதனைத் தவிர்க்கவேண்டும்.

✦ கூடுதலாக இந்நோயின் தாக்கத்திற்கு மருத்துவர்களும், மருத்துவ ஊழியர்களும், மருத்துவ ஆய்வாளர்களும் ஆளாகியுள்ளமையால் - நோயாளர்களுடன் தொடர்புபடும் மருத்துவ உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மாஸ்க் (வாய், மூக்குக் கவசம்) பாவித்துக் கடமையில் ஈடுபடல்வேண்டும்.

இந்நோயின் தாக்கத்திற்குட்பட்டவர்களில் 10-20% அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் வைத்து சிகிச்சை மேற்கொள்ளவேண்டியவர்கள். உலக சுகாதார நிறுவனத்தின் தகவலின்படி 3 வீதமானோர் இறக்கின்றனர்.

எனவே, எம்மக்களாகிய நீங்கள் இந்நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்க மேற்கூறப்பட்ட சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

***- தமிழீழ சுகாதார சேவை***



# சின்னஞ்சிறு செய்திகள்

## பாடசாலைகளுக்கு நூல்கள்

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆரம்பக் கல்வி அபிவிருத்திப் பிரிவினால் - யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியீடு செய்யப்பட்ட 'எளிய பரிசோதனைகள்', 'சூழலை அறிவோம்', 'சுந்தரக் கதைகள்' மற்றும் எழுத்தாக்கத் திறனை விருத்தி செய்வதற்கான செயல்நூல்கள் ஆகியன ஆரம்பப் பிரிவுகளைக் கொண்ட சகல பாடசாலைக[ளுக்]கும் வழங்கப்படவுள்ளன.

சகல பாடசாலைகளும் அவற்றைப் பிள்ளைகள் பயன்பெறும் வகையில், திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டும் எனப் பிரதி வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டுவிழா

வடக்கு-கிழக்கு விளையாட்டுத் திணைக்கள அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான 2003 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுவிழா யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன் முதற்கட்டமாக ஆண்களுக்கான போட்டி புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்றும், பெண்களுக்கான போட்டி அதே மைதானத்தில் நாளையும் நடைபெறவுள்ளது. இப்போட்டி[யில்] 28 அணிகள் மோதவுள்ளன. (சு)

## வட்டுக்கோட்டை மாணவர்களுக்கு விடுதி

வட்டுக்கோட்டை - தென்னிந்திய திருச்சபையின் சமூக மேம்பாட்டு கல்விப் பிரிவினால் "வசந்தகம்" என்ற பெண்கள் மாணவர் விடுதி ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடுதியைத் தென்னிந்திய திருச்சபை பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் திறந்து வைத்துள்ளார்.

பின்தங்கிய கிராமங்களில் வசிக்கும் வறிய மாணவர்கள் இந்த விடுதியில் தங்கவும், இவர்களுக்கான கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இலவசமாகக் கற்பதற்கு ஏற்ற ஒழுங்குகள்செய்து கொடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (118)

## இலவசக் கணினிக் கருத்தரங்கு

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகமும், மானிப்பாய் ஐ.எம்.எஸ். கணினி நிறுவனமும் இணைந்து பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்களுக்கு - விடுமுறைக் காலத்தில் கணினிப் பயிற்சி ஒன்றை நடா[த்த]வுள்ளனர்.

இதில் பயன்பெறும் மாணவர்கள் - பாடசாலை அதிபர்களின் சிபார்சின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இப்பயிற்சிநெறியின் முதலாவது பிரிவு எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என மானிப்பாய் பரிஷ் லியோக் கழகம் அறிவித்துள்ளது.

## போயாதின நிகழ்வுகள்

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி போயா நிகழ்ச்சிகள் அதிகாலை 5.00 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி, நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

# நவீன தொழில் நுட்ப வசதிகள் மத்தியில் மாட்டுவண்டியில் பயணிக்கும் மாணவர்கள்



இன்றைய நவீன உலகில் அறிவுசார் மூலதனம் எனக் கூறப்படும்- கல்விக்கும், அறிவிற்கும் கூடுதலான முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறது.

பாடசாலைக் கல்வியின்போதே மாணவர்கள வினைத்திறன்மிக்க மனித மூலதனமாக மாறவேண்டுமென்பது இன்றைய கல்விக் கோட்பாடாகும்.

அந்தவகையில், இன்றைய பாடசாலைகளில் மாணவர்கள் புத்தக அறிவை மட்டும் பெற்றுக்கொண்டால் போதாது. மாறாக ஒரு செயலை எவவாறு செம்மையாக, வினைத்திறன் மிக்கதாக ஆற்றக்கூடியவராக வேண்டும் என்பது பற்றித் தீவிரமாகச் சிந்திக்கப்பட்டு வருகின்றது.

மாணவர்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்கும், குழுநிலைச் செயற்பாட்டினை விருத்தி செய்வதற்கும் "செயற்பாட்டு அறை" என்ற உபகரண அறையை ஒவ்வொரு முதன்னிலைப் பாடசாலைகள்தோறும் கல்வியாளர்கள் உருவாக்குமாறு கோரியுள்ளனர்.

அதற்கிணங்க இலங்கைக் கல்வித் திணைக்களம் - தென்பகுதி மற்றும் சிங்களப் பிரதேசங்களில் கூடுதலான வளங்களை வழங்கி வருகின்றது.

இந்த வகையில், இலங்கையின் கல்வி அபிவிருத்தி - மாணவர்கள் சிறுவயது முதல் கணினி அறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவுகளில் பிரயோகிக்கக்கூடிய வகையில் உருவாக்கப்படுகின்றார்கள்.

அரசாங்கம் அவ்வாறு ஊக்குவிப்புக்களை வழங்குவதோடு மட்டுமல்லாது, கொழும்பு மற்றும் கண்டி மாவட்டங்களிலே "சர்வதேசப் பாடசாலைகள்" தனியார்துறையினால் உருவாக்கப்பட்டு, இன்றைய உலகிற்கு வேண்டிய ஆங்கில மொழியறிவுமிக்க எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கும் பணி பாரியளவில் வெற்றியுடன் செயற்பட்டு வருகின்றது.

ஆனால், வன்னி மாவட்டத்தில் எமது சிறுவர்கள் பாரியளவில் அவர்களது கல்விக்குரிய புறநிலை வசதிகளில்லாத நிலையில் கல்வியில் பின்னடிக்கப்பட்டு வருகின்றனர்.

கொடிய யுத்தத்தின் விளைவுகள் ஒருபுறம், வறுமை ஒருபுறம் வன்னி மாணவர்களை வாட்டி வதைக்கின்றது. இதனால் எவ்வித அடிப்படை வசதிகளற்ற வன்னி மாவட்டப் பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை இடைநடுவினில் நிறுத்திவிட்டு, தமது வயிற்றுப்பிழைப்பிற்காகக் கூலித்தொழில்களை நாடிச் செல்கின்ற நிலைமையே பரவலாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையிலிருந்து ஏனைய மாணவர்களுக்கும், மக்களுக்கும் முன்னுதாரணமாக கரிப்பட்டமுறிப்புக் கிராமம் ஒரு முன்மாதிரியான செயற்பாட்டில் இறங்கியுள்ளது.

மேழிவனக் கிராமத்திலிருந்து 5 மைல் தொலைவிலுள்ள கரிப் பட்டமுறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு மாணவர்கள் தினமும் காட்டுவழிப் பாதையூடாகப் பல சிரமத்தின் மத்தியில் போய் வந்தனர்.

இந்நிலைமையைக் கருத்திற்கொண்ட பாடசாலை அதிபர் து.யேசுதாஸந்தர், ஒன்றரை வருட காலமாக மேற்கொண்ட முயற்சி தற்பொழுது ஒரு செயற்பாட்டு வடிவத்தினைப் பெற்றுள்ளது.

அதாவது 5 மைல் தொலைவிற்கு நடந்து செல்லும் மாணவர்களுக்கு ஒரு மாட்டுவண்டியைப் பலரது ஒத்துழைப்புக்களுடன் செய்து, தற்பொழுது மாணவர்கள் மாட்டுவண்டியில் தமது பாடசாலைக்குச் சென்று வருகின்றனர்.

பாடசாலைக்கு மாணவர்கள் வண்டிலில் பயணத்தினை மேற்கொள்வதானது, கடந்த மாதம் 27 ஆம் திகதி நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் - இந்த மாட்டுவண்டிச் சேவையை ஆரம்பித்து வைத்தார். இன்றைய நவீன யுகத்திலும் மாட்டு வண்டியில் சென்று கல்வியைத் தொடரவேண்டிய நிலையில் வன்னி மாணவர்கள் இருப்பது அங்குள்ள வசதியீனங்களைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. ✳

# மக்கள் நலன்புரிச்சங்க தேசிய பயிற்சிப் பாசறை

மக்கள் நலன்புரிச் சங்கப் படையணிகளின் 13 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், தேசியப் பயிற்சிப் பாசறை நிகழ்வும் நேற்று முதல் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில், சங்கத் தலைவர் இ.சற்குணநாதன் தலைமையில் நடைபெற்று வருகிறது. இந்த நிகழ்வுகள் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை இடம்பெறும்.

பயிற்சிப் பாசறை நிகழ்வில் இவ்வருடம் நான்கு நாட்கள் வதிவிடப் பயிற்சிப்பாசறை நிகழ்வாக நடைபெறும். இப்பயிற்சிப் பாசறை நிகழ்விற்கு பயிற்சித் தலைவராக து.வைத்திலிங்கம் கடமையாற்றுவார். இப்பயிற்சிப் பாசறையில் - தீப்பாசறை நிகழ்வு, பாலங்கள் அமைத்தல், விளையாட்டுக்கள் சம்பந்தமான போட்டிகள், வீதி ஒழுங்கு, முதலுதவிப் போட்டிகள், திசையறிதல், சமையல், அணிநடை போன்ற பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. 33 பாடசாலைகளைச் சேர்ந்த 400 மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.


# ஈராக் போர்க்களம்



பக்தாத்தில் - ஈராக்கிய அரச நிறுவனங்களும், வணிக மையங்களும் மக்களால் கொள்ளையிடப்படுகின்றன.



போரில் கைதான ஈராக்கியப் படையதிகாரி ஒருவரிடம் களத்திலேயே விசாரணை.




அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளிடம் ஈராக்கியப் போர்க் கைதிகள்.

# பக்தாத்தின் ஒரு பகுதியே வீழ்ந்தது

## அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவிப்பு

பக்தாத் நகரை அமெரிக்கப் படைகள் கைப்பற்றியமை குறித்துத் திருப்தி தெரிவித்த அமெரிக்காவும், பிரிட்டனும் - எனினும், சதாமின் ஆட்சி இன்னமும் முற்றாக ஒடுக்கப்படவில்லை எனவும் எச்சரித்துள்ளன. பக்தாத்தின் ஒரு பகுதியும், சதாமின் சொந்த நகரான திக்ரிட் நகரும் இன்னமும் கைப்பற்றப்படாதுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்தார்.

ஆபத்தான நாட்கள் இனித்தான் வரவுள்ளன என இந்நாடுகளின் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். பிரான்ஸ், ஜேர்மன் தலைவர்கள் பக்தாத் வீழ்ச்சியை வரவேற்றபோதிலும், ஈராக் போர் விரைவில் முடிவுக்கு வரவேண்டும் எனக்கேட்டுக்கொண்டுள்ளனர். இந்நாடுகள், ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலை கடுமையாகக் கண்டித்து வந்தமை தெரிந்ததே. இதேசமயம் - அரபுலகில் சதாமின் வீழ்ச்சி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்கப் படைகள் விரைவில் ஈராக்கை விட்டு வெளியேற வேண்டும் என அந்நாட்டுத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



ரொனி பிளேயர், புஷ் - வெற்றியில் திருப்தி

# எல்லாம் முடிந்துவிட்டது; ஈராக் தூதுவர் தெரிவிப்பு!



எல்லாம் முடிந்துவிட்டது (**Game is Over**) என ஐ.நாவுக்கான ஈராக்கியத் தூதுவர் முகமட் அல்-டோரி தெரிவித்துள்ளார். பக்தாத் வீழ்ச்சி குறித்துக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவரது இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், கூறுவதற்கு எதுவுமில்லை, எல்லாம் முடிந்துவிட்டது. இனி அமைதி நிலவும் என எதிர்பார்க்கிறேன் என்றார். 'எல்லாம்' என்று எதைக் கூறுகிறீர்கள் என்று கேட்டபோது, 'போரைத்தான்' என்றார் டோரி.

ஈராக்குடன் எனக்கு இப்போது எந்தத் தொடர்புகளும் கிடைக்கவில்லை. எனது பணி அமைதியைத் தோற்றுவிப்பதே எனக் குறிப்பிட்ட அவர், குழம்பிய மனநிலையில் காணப்பட்டதாக செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

# ஈராக்கியரின் மனமாற்றம்; பிரான்ஸ் இக்கட்டுநிலையில்

ஈராக் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலைக் கடுமையாகக் கண்டித்து வந்த பிரான்ஸுக்கு, பக்தாத்தில் - அமெரிக்கப் படைகளை ஈராக்கிய மக்கள் மகிழ்ச்சியாக வரவேற்ற நிகழ்வு, பேரிடியைக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதல் - முட்டாள்தனமான, சட்ட விரோதமான நடவடிக்கையென பெரும்பாலான பிரெஞ் மக்களும், அரசியல்வாதிகளும் கூறிவந்தனர். ஆனால் - ஈராக்கியர்களின் திடீர் மாற்றம் சர்வதேச சமூகத்தில்



பிரான்ஸைத் தனித்துவிடச் செய்யலாம் என பிரெஞ் பத்திரிகையான 'லிபரேஷன்' தெரிவிக்கிறது.

'பிரெஞ் அதிபர் ஷிராக் முடியில்லாத சமாதான மன்னன்' என அப் பத்திரிகை கிண்டலடித்துள்ளது.

தனது போர் நடவடிக்கைக்கு பிரான்ஸ் உதவ மறுத்ததால், ஈராக்கில் இனி மேற்கொள்ளப்படவுள்ள மீள்புனரமைப்புப் பணிக்கு பிரான்ஸை அழைக்க அமெரிக்கா மறுக்கலாமென பிரெஞ் வட்டாரங்களில் அச்சம் நிலவுகிறது.

## சதாமின் ஆட்சி கவிழ்ப்பு; லண்டனில் ஈராக்கியர் மகிழ்வு

(லண்டன்)

சதாமின் ஆட்சி கவிழ்ந்ததை, லண்டனில் உள்ள ஈராக்கியர்கள் கொண்டாடி மகிழ்ந்தனர். இவர்களில் சிலர் ஈராக் திரும்ப விருப்பம் தெரிவித்தனர். வட லண்டனின் கிறீன்லேன் பகுதியில் புலம்பெயர்ந்த ஈராக்கியர்களும் குர்திஷ் மக்களும் அமெரிக்க - பிரிட்டிஷ் கொடிகளைத் தாங்கியபடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

இவர்களில் சிலர், நகரை அழித்துவிட்டுச் சதாம் தப்பியதை விட, போருக்கு முன்பாகவே சதாம் தப்பியோடிவிட்டிருந்தால், ஈராக்கில் உள்ள எங்களது உறவுகள் பாதிப்புற்றிருக்கமாட்டார்கள் என ஆவேசமாகத் தெரிவித்தனர்.

# ஈராக்கின் கிர்குக் நகரமும் குர்திஷ் படைகளிடம் வீழ்ச்சி

## பக்தாத்தில் திடீர் என வெடித்த மோதல்

(பக்தாத்)

பக்தாத் நகர் வீழ்ச்சியைத் தொடர்ந்து வட ஈராக்கின் எண்ணெய நகரான கிர்குக் நகரும் அமெரிக்க ஆதரவு குர்திஷ் படைகளிடம் வீழ்ந்துள்ளது.

இதேவேளை, பக்தாத்தில் ரைகிறிஸ் ஆற்றுக்கு அருகேயுள்ள ஜனாதிபதி மாளிகைப் பகுதியில், நேற்று ஈராக்கியப் படைகள் கனரக ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகள் கொண்டு கடும் தாக்குதலை நடத்தினார்கள். இத்தாக்குதலில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

பக்தாத் மக்கள் தமது வீடுகளினுள் நேற்றிரவு முடங்கிக் கிடந்தனர். சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ளதால் கொள்ளையர்கள் தமது வீடுகளுக்குள் நுழையலாம் என்ற அச்சம் அவர்களிடையே காணப்பட்டது.

உலகவலம்



பக்தாத் பெரு வீதியொன்றில் டாங்கிகள் சகிதம் கூட்டணிப் படைகள்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

**மலேசியா/பிரித்தானியாவில் உயர்கல்வி**

மலேசியாவில் இரண்டு வருடம் பிரித்தானியாவில் ஒரு வருடமும் கல்விகற்று நீங்களும் ஒரு பொறியியலாளராகலாம்.

- ☆ பாடநெறி ஆரம்பம் மே/யூன் 2003
- ☆ ஆகக்குறைந்த தகைமை G.C.E (O/L)
- ☆ பாடநெறிக்கட்டணத்தை இலகுவாக தவணை முறையில் செலுத்தலாம்.
- ☆ விசா ஒழுங்குகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க.
Far Overseas Educational Consultants
444C 2/1,Galle Road,Ratmalana
யாழ்.தொடர்புகளுக்கு 30 1/1 சிராம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
Tel:- 0777-578059 (வ.கி.மாகாண இணைப்பாளர்)
072-859041
E.Mail:- ecolenviros@ dynaweb.lk (சி-765)

**RAMCO CEMENT**
**ராம்கோ சீமெந்து**

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட ராம்கோ சீமெந்து இன்று (11-04-2003) வெள்ளிக்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது. தேவையானோர் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
ஈஸ்வரபகவான் அன் கம்பனி,
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 021-2222350 (சி-812)

## மரண அறிவித்தல்

### நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்

**(மணியம் களஞ்சியம், கொடிகாமம்)**



உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம் (08.04.2003) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை, தங்கமலர் ஆகியோரின் அன்பு மகனும், மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முருகேசு (C.T.B) அன்னம்மா ஆகியோரின் மருமகனும், சீவரத்தினத்தின் அன்புக் கணவரும், கார்த்திகேசு (Ret. தபாலக ஊழியர்) சிவகுரு, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை ஆகியோரின் சகோதரனும், ராஜீவன் (நோர்வே), சுரேஸ்குமார் (J.T.I நிறுவனம்), ராஜ்குமார் (லண்டன்), விஜிதா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் - ஆசிரியை), சுஜாதா (யூனியன் அஷ்யூரன்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்ரிஸ் (நோர்வே), சாந்தி, பரம்தில்லைராஜன் (பளை மத்திய கல்லூரி - ஆசிரியர்), குணரேகா, ஹரிகரன் (சுவீடன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாமினி, கபிலா, கார்முகி, கபிலினி, விதூஷன், யதூஷன், பிரதீப்ராஜ், அபிராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.04.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் ஈச்சங்காட்டு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சுரேஸ்குமார் (மகன், J.T.I நிறுவனம்)
பரம்தில்லைராஜன்
(மருமகன், பளை மத்திய கல்லூரி)

உசன்,
மிருசுவில். (சி/811)

## பக்தாத்தில் தற்கொலைத் தாக்குதல்

பக்தாத்தில் அமெரிக்கப் படைகளின் சோதனை நிலையம் ஒன்றில், நேற்றிரவு நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் அமெரிக்கப்படையினர் பலர் கொல்லப்பட்டனர்.

உடல் முழுதும் கிரனைட்கள் மற்றும் வெடிமருந்துகளுடன் வந்த ஈராக்கியர் ஒருவரே இத்தாக்குதலை நடத்தியிருக்கின்றார்.

## க.பொ.த. உயர்தர வரலாறு செயலமர்வு

க.பொ.த. உயர்தரத்தில் வரலாற்றினை ஒரு பாடமாகத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை வழிகாட்டிச் செயலமர்வு, நாளை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்வி மேம்பாட்டுப் பேரவையினரின் ஏற்பாட்டில் நடைபெறும் மேற்படி பரீட்சை வழிகாட்டிச் செயலமர்வில் - யாழ். பல்கலைக்கழக வணிகத்துறையின் மூத்த பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், கருத்துரையையும் பரீட்சை வழிகாட்டல் அறிவுரைகளையும் வழங்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(லி)

**அறிவொளி NALLUR**

**Com. Maths**
Mr. B.ரவீந்திரன் B.Sc.
A/L - 05
திரிகோணகணிதம்
ஆரம்பம்: 12.04.2003 4 p.m.
(Tue, Sat, Sun 4 p.m.)
A/L - 04
வகையீட்டின் பிரயோகம்
(Sat, Sun 2.30 p.m., Thu, Fri 4 p.m)

**CHEMISTRY**
Mr.DIAS B.Sc. (Spl. in che)
A/L 04 - Wed, Thu 3 p.m., Sun 4 p.m.

**PHYSICS**
Mr.K.ரமேஸ் B.Sc.
A/L - 04 - Mon, Wed, Fri - 5p.m.
A/L - 05 - Mon, Wed - 4 p.m.

**BIOLOGY**
Mr.T.ஜெயசீலன் B.Sc.
A/L- 05
CORE BIOLOGY
A/L - 04
FUNCTIONAL ANIMAL
(சி-806)

# ஒரு நிலையான தீர்வையே தமிழர் வேண்டுகின்றனர்!

## திருமலை மானுடத்தின் தமிழ்க்கூடலில் எழிலன் உரை

(திருகோணமலை)

"தொடர்ந்த யுத்தத்தை நிறுத்தி, இன்று தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து நின்று - ஒரு நிலையான மாற்றத்தை, தீர்வைத் தாருங்கள் என சிங்கள மக்களைக் கோரிநிற்கின்றோம்.

இதனைப் புரிந்து கொண்டு தென்பகுதி சிங்கள மக்கள் ஒன்றிணைந்து நல்ல மாற்றத்தை, தீர்வை தமிழ்மக்களுக்கு வழங்க ஒத்துழைக்க வேண்டும்

இதனை விடுத்து குழப்பும் நடவடிக்கையை இனி நிறுத்த வேண்டும். ஆனால், சில கட்சிகள் இதைச் செய்யமுனைகின்றன."

- இவ்வாறு மானுடத்தின் தமிழ்க் கூடல் நிகழ்வின் மூன்றாவது நாள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய, வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ந.அனந்தராஜ் தலைமையில் நடைபெற்ற உரையரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய எழிலன் தொடர்ந்து குறிப்பிடுகையில் -

இன்றைய மானுடத்தின் தமிழ்க் கூடலினை ஏற்படுத்த இந்தச் சமாதானச் சூழல், காலம் என்பன வழி வகுத்துள்ளன. இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை மூவின மக்களும் இணைந்து நடாத்துகிற நிகழ்வாக இது ஏற்படுத்தப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது என்றார்.

## சாதாரணதர...

ஒரு மாணவி 6A யையும், மூன்று மாணவிகள் 5A யையும், ஐந்து மாணவிகள் 4A யையும் பெற்றுள்ளனர்.

*பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை*

கு.பிறேமலதா- 8A 2C யையும், சே.சங்கரி - 8A 2B, ஒரு மாணவி 7A, மூன்று மாணவிகள் 6A, ஏழு மாணவிகள் 5A யையும் பெற்றுள்ளனர்.

யாழ். நகரப்பாடசாலைகள் சிலவற்றின் பெறுபேறுகள் வருமாறு-

*புனித பத்திரிசியார் கல்லூரி*

எஸ்.ரூபன்- 7A, எஸ். பிரசாத் 7A

*யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி*

வித்தியா இரட்ணசாமி 10A, ஒன்பது மாணவிகள் 9A.

*பரி.யோவான் கல்லூரி*

ரி.தீனதயாளன் 10A, எஸ்.வேணுகாந்தன் 10A, 32 இற்கு மேற்பட்ட மாணவர்கள் 7A இற்கும் மேல் பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

யாழ். நகரப் பாடசாலைகள் பெரும்பாலானவற்றின் முன்னணி பரீட்சைப் பெறுபேறுகளை நமது ஈழநாடு ஏற்கனவே வெளியிட்டுள்ளது தெரிந்ததே.

(லி)

## தொண்டர் ஆசிரியர்...

ஆகியோரும் சமுகமளித்தனர்.

நியமனங்களை மேற்கொள்ளுவதற்கு முன்பாக - சட்டமா அதிபரின் ஒப்புதலையும் பெறுவதற்கென, உரிய கோவைகளை சட்டமா அதிபருக்கு உடனடியாக அனுப்பிவைக்கும்படி கல்வி அமைச்சருக்கு பிரதமர் பணிப்புரை வழங்கினார். ஒப்புதல் பெறப்பட்டதும் நியமனங்கள் வழங்குமாறு கல்வி அமைச்சரை பிரதமர் பணித்துள்ளார்.

எவ்விதத்திலும், ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 1000 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற முடிவு, கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதேவேளை - மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் இராணுவ முகாம்கள் அமையக்கூடாது என்ற கூட்டமைப்பின் நிலைப்பாட்டை தாம் ஏற்பதாகவும், யாழ். மாநகரக் காணியில் இராணுவ முகாம் அமைக்க முயற்சிக்கப்பட்ட நடவடிக்கை கைவிடப்பட்டுவிட்டதாகவும் பிரதமர் ரணில், கூட்டமைப்பினிடம் தெரிவித்தார்.

## சிறுவர்களுக்கான...

செயலக அதிகாரி ஜோன் குணரத்ன, யுனிசெப்பின் இலங்கைக்கான பிரதிநிதி ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

**மாபெரும் சிறப்புத் தள்ளுபடி**
**ராசி சில்க்ஸ் நல்லி சில்க்ஸின் இணைந்த சேவை**

உங்கள் ரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப சகல
வகையான சாறிகள், பஞ்சாபி அன் சோளிகள், சிறுவர்கள்,
இளையவர்களுக்கான றெடிமேட் ஆடைகள்
அனைத்திற்கும் இன்றே வாருங்கள்
(சி-809)

இத்தள்ளுபடி 07–14 வரையுமே

**ராசி சில்க்ஸ்**
70,71 A, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம். 021 - 2225571

**நல்லி சில்க்ஸ்**
121/1, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம். 021 - 2225573

காலம்: 16.04.2003
(புதன்)
பிற்பகல் 4.00 மணி

**கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும்**

தமிழகத்தின் பிரபல பின்னணிப் பாடகியும் தமிழ் இசைப் பாடகியுமான
தமிழீழ இசைக் கலைஞர்களுடன் ரீ.கே.கலா
இணைந்து வழங்கும்
**மாபெரும் தமிழ் இசை மாலை**



இடம்: வீரசிங்கம் மண்டபம்
நமது ஈழநாடு
ராம்கோ சீமெந்து

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.